இனி இது ரகசியம் அல்ல!

பக்கங்கள்: 16

விலை:20 ரூபா


# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஆவணி 16 | சனிக்கிழமை 01.09.2018 | கதிர் 300

இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் 'வெண்ணெய்த் திரண்டு வரும்போது தாழி உடைந்த கதையாகி' போய் விடுமோ என்ற நிலைமைதான் உள்ளது.

'மலையைக் கிள்ளி எலியைப் பிடித்த' மாதிரி, இனப்பிரச்சினைத் தீர்வையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்பை பக்கம் 03 »

# கூட்டமைப்புத் தலைமை தோல்வி என்கிறார் விக்கி



## தன் மீது தமிழ்த் தேசிய அரசியல் வரலாறு சுமத்தியுள்ள பொறுப்பை உணர்கிறாராம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 01

2009இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொண்ட தலைமைப் பாத்திரம் மற்றும் அணுகுமுறை போன்றவற்றில் அது தோல்வி அடைந்துவிட்டது. வரலாறு எனக்கு வழங்க முன்வந்துள்ள தலைமைப் பாத்திரத்தை ஏற்கும்படி நான் வற்புறுத்தப்படுகிறேன். இந்தப் பின்புலத்தில் அறுபது வருடங்களுக்கு மேற்பட்ட தமிழ்த் தேசிய அரசியல் போராட்ட வரலாறு எனக்கு வகுத்து அளித்திருக்கும் பொறுப்பை நான் தெளிவாக உணர்கிறேன்.

- இவ்வாறு கூறியிருக்கின்றார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சீ.வீ. விக்னேஸ்வரன் . பக்கம் 10 »

## ஞானசாரரின் மனு நேற்று நிராகரிப்பு

கொழும்பு,செப்.01

தனக்கு விதிக்கப்பட்ட தண்டனைக்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்கு அனுமதி கோரி, பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

பக்கம் 14 »

## அச்சுவேலியில் காணி விடுவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.01

அச்சுவேலி பகுதியில் 23 வருடங்களாக இராணுவத்தினர் பயன்படுத்திய பொதுமக்களின் காணி நேற்று விடுவிக்கப்பட்டுள்ளது.

6 குடும்பங்களுக்குச் சொந்தமான 2 ஏக்கர் பக்கம் 14 »

## குற்றச் செயல்களை தடுத்துநிறுத்த முறிகண்டியில் பொலிஸ் நிலையம்

ஜனாதிபதியிடம் பொது அமைப்புகள் வலியுறுத்தல்

முல்லைத்தீவு, செப்.01

பரிதவித்து உயிரிழந்த உறவுகளுக்கு நீதி கிடைக்க வேண்டு மானால் குற்றவாளிகள் இனம் காணப்பட்டுக் காலம் தாழ்த்தாது தண்டனை வழங்கப்படவேண் டும். அத்துடன் குற்றச் செயல்களைத் பக்கம் 14 »

## நித்தியகலா படுகொலைக்கு நீதி கோரி முறிகண்டியில் கொதித்தெழுந்த மக்கள்

கிளிநொச்சி, செப்.01

கழுத்து நெரித்துப்படுகொலை செய்யப்பட்ட கர்ப்பிணிப் பெண்ணான நித்தியகலாவுக்கு நீதிகோரியும், கொலையாளிகளை உடன் கைது செய்ய வலியுறுத்தியும் முல்லைத்தீவு, முறிகண்டிப் பிள்ளையார் ஆலயம் முன்பாக நேற்றுக் கவனவீர்ப்புப் பக்கம் 14 »



## நித்தியகலாவின் உடல் நல்லடக்கம்

கிளிநொச்சி, செப்.01


கொலையுண்ட நிலையில் மீட்கப்பட்ட கிளிநொச்சி, முறிகண்டிப் பகுதியைச்சேர்ந்த கருப்பையா நித்தியகலாவின் உடல் நேற்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

முறிகண்டிப் பகுதியில் அமைந்துள்ள அவரது பக்கம் 14 »

## சிங்களவரை நோக்கி விக்கி விரல் நீட்டிப் பேசமுடியாது!

மேர்வின் சில்வா எச்சரிக்கை

கொழும்பு,செப்.01



சிறுபான்மை இன மக்கள் சிங்களவர்களை எதிர்த்தால் அவர்கள் அடியோடு ஒழிக்கப்படுவார்கள். சிறுபான்மை இனத்தவர்களுக்கு வேறு ஒரு நாடு தேவையில்லை. எனவே வடக்கு முதல்வர் எம்மை நோக்கி விரல் நீட்டி கருத்துக்களைத் தெரிவிக்க பக்கம் 14 »

## திலீபனின் நினைவாலயத்தில் மீளவும் மும்மொழிப் பதாகை



யாழ்ப்பாணம், செப்.01

நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினை வாலயத்தில் மீண்டும் மும்மொழி களில் 'புனிதம் காப்போம்' எனப் பதாகைகள் கட்டப்பட்டு உள்ளன.

நல்லூர் மகோற்சவம் நடைபெற்றுகொண்டு இருக்கும் இக்காலப் பகுதியில் திலீபனின் பக்கம் 14 »

## கர்ப்பிணிப் பெண் கொலை; சந்தேகத்தில் ஒருவர் கைது!

கிளிநொச்சி, செப்.01

முல்லைத்தீவு,முறிகண்டி யைச் சேர்ந்த கர்ப்பிணிப் பெண் கொலைக் குற்றச்சாட்டில் கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி விநாயகபுரத்தைச் பக்கம் 14 »

## பிம்ஸ்ரெக் புதிய தலைவராக ஜனாதிபதி மைத்திரி தெரிவு



காத்மண்டு,செப்.01

வங்காள விரிகுடா வலய நாடுகளின் பல்துறை தொழில்நுட்ப, பொருளாதார ஒன்றியமான பிம்ஸ்ரெக் அமைப்பின் ஐந்தாவது அரச தலைவர்கள் மாநாட்டின் தலைமைப் பதவி இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வழங்கப்பட்டுள்ளது. பக்கம் 14 »

## யாழ். வந்த கடுகதி மீது மதவாச்சியில் கல்வீச்சு

தாளையடியைச் சேர்ந்தவர் காயம்

கொழும்பு, செப்.01

கொழும்பில் இருந்து யாழ்ப் பாணம் நோக்கி வந்து கொண் டிருந்த கடுகதி ரயில் மீது மேற் கொள்ளப்பட்ட கல் வீச்சில் யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர் காயமடைந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் இடம்பெற்றது. பக்கம் 14 »

## மருத்துவ நிபுணரை நியமிக்குமாறு கர்ப்பிணிப் பெண்கள் போராட்டம்



கிளிநொச்சி, செப்.01

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில்கடந்த ஒரு மாத காலமாக மகப்பேற்றியல் மற்றும் பெண் நோயியல் மருத்துவ நிபுணர் இல்லாதமையால் கர்ப்பிணிப்பெண்கள் பெரிதும் பதிப்பை எதிர்நோக்கு கின்றனர். பக்கம் 14 »

# காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்காக வற்றாப்பளை ஆலயத்தில் தீச்சட்டி ஏந்திய மக்கள்



வன்னி வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று முன்தினம் சர்வதேச காணாமல் போனோர் தினமாகையால் தீச்சட்டி ஏந்தி சிறப்பு வழிபாட்டில் ஈடுபட்டனர்.

553 ஆவது நாளாக பல்வேறு வழிகளில்போராட்டத்தில்ஈடுபட்டுள்ள காணாமற் போனோரின் உறவினர்கள் உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளமையை அவதனிக்க முடிகிறது.

இந்தநிலையில்காணாமற்போன பிள்ளைகள்தொடர்பில்நல்லதொரு தீர்வு கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்த்து பிரசித்தி வாய்ந்த ஆலயங்களுக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன்படி நேற்று முன்தினம் மாலை வற்றப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு முன்னால் காணாமற்போனோரின் உறவினர்கள் தீச்சட்டி ஏந்தி வழிபட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.


இதன்போது குறித்த வழிபாட்டு போராட்டத்தில் கலந்திருந்த தாய் ஒருவர் கருத்து தெரிவிக்கையில்–

காணாமற்போன எங்களுடைய பிள்ளைகள் தொடர்பில் தீர்வு கிடைக்க வேண்டும் என்று திருகேதீஸ்வரம் சிவன் ஆலயத்திலும் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தோம்.

அதே நேரம் வற்றப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு வந்து கற்பூரச்சட்டி ஏந்தி தேங்காய் உடைத்து வழிபட்டுக் கொண்டிருக்கின்றோம். எங்களுக்கு நல்லதொரு தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இந்த இறை வழிபாட்டை மேற்கொண்டுள்ளோம்.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் சக்திவாய்ந்த நாடுகளாக இருக்கின்ற படியால் எங்களுக்கு நிச்சயம் தீர்வைபெற்றுத் தருவார்கள் என்ற எதிர்பார்ப்போடு நாங்கள் இந்தப் போராட்டத்தை மேற் கொண்டுள்ளோம். என்று தெரிவித்துள்ளார்.

# புதைந்து போயிருந்த மாதா சிலை பத்து வருடங்களின் பின்னர் மீட்பு!



கிளிநொச்சியில் பத்து வருடங்களின் பின்னர் புதைந்து போயிருந்த மாதாசிலை ஒன்று காட்டில் இருந்து கிடைத்துள்ளது. முகமாலையிலுள்ள மாதா தேவாலயத்தில் இருந்த உருவச்சிலையே இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

போர் அனர்த்தம் காரணமாக முகமாலையில் உள்ளதேவாலயம்அழித்து போய்விட்டது என பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

அந்தப் பகுதி மக்கள் இன்னமும் தங்கள் இடங்களுக்குச் சென்று குடியேறாத நிலையில் அவர்கள் இடைக்கிடையே, சென்று தமது காணிகளைப் பார்த்து வருகின்றனர்.

இந்த வாரம் தங்கள் காணிகளைப் பார்ப்பதற்காக வந்த சந்தர்ப்பத்தில் சிலை போன்ற ஒன்றை அவதானித்துள்ளனர். அது அங்கிருந்த தேவாலயத்தின் மாதா சிலை என அடையாளம் காணப்பட்டுள்ளது. பின்னர் அந்த சிலை பாதுகாப்பாக காட்டுக்கு வெளியே கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த சிலையை வைப்பதற்கு உரிய இடம் ஒன்றை நிர்மாணிக்கும் வரையில் அந்தச் சிலையை மரத்திற்கு கீழ் வைத்து பூஜை செய்வதற்கு முகமாலை மக்கள் தீர்மானித்துள்ளனர்.

# இந்தியத் தலைவர்கள் வணக்க நிகழ்வு

கிளிநொச்சி, செப்.01

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட பிரிவினால் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மறைந்த பாரத தேசத்தின் தலைவர்களான முன்னாள் பிரதமர் வாஜ்பாய், முன்னாள் தமிழக முதல்வர் மு.கருணாநிதி ஆகியோரின் வணக்க நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் சிறப்பு அதிதியாக இந்தியத்துணைத் தூதுவர் சங்கர் பாலச்சந்திரன் கலந்து கொள்வார்.

யாழ். பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத்துறைத் தலைவர் கே.ரி.கணேசலிங்கம் நினைவுரை ஆற்றுவார்.

# யாழ்தேவி அருந்தப்பு!



யாழ்ப்பாணம்,செப்.01

பெரும்ரயில்விபத்தொன்று, ரயில் நிலைய அதிபர்கள் மற்றும் அதிகாரிகளின் சாமர்த்தியமான செயற்பாட்டால் தடுக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் – ஸ்வஸ்திபுர ரயில் நிலையத்தில் இரு ரயில்கள் ஒரே தண்டவாளத்தில் நேருக்கு நேர் பயணித்துள்ள நிலையிலேயே இந்தச் சம்பவம் நேற்று அதிகாரிகளின் அதிரடி செயற்பாட்டால் தடுத்து நிறுத்தப்பட்ட நிலையில் பெரும் உயிர்ச்சேதங்களும் தடுக்கப்பட்டுள்ளன.

கொழும்பிலிருந்து அநுராதபுரத்திற்கு பயணித்த கடுகதி ரயிலும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயிலுமே இவ்வாறு ஒரே தண்டவாளத்தில் பயணித்த நிலையில் விபத்திற்குள்ளாகவிருந்தன என ரயில் கட்டுப்பாட்டு அறை தெரிவித்துள்ளது.

ரயில் சமிக்ஞைகளில் ஏற்பட்ட திடீர் கோளாறு காரணமாகவே இந்த அனர்த்தம் ஏற்படவிருந்தது. அதனையடுத்து உடனடியாக விரைந்து செயற்பட்ட அதிகாரிகளின் சாமர்த்தியமான செயற்பாட்டினால் விபத்தைதடுத்து நிறுத்தப்பட்டுள்ளது என ரயில் நிலைய அதிகாரி தெரிவித்துள்ளார்.

# காந்தியடிகள் ஜெயந்தி தின பேச்சுப் போட்டி திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், செப்.01

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் மகாத்மா காந்தியடிகளின் 149 ஆவது ஜெயந்தி தினத்தை முன்னிட்டு வட மாகாண பாடசாலை மாணவர்கள் மத்தியில் நடத்துகின்ற பேச்சுப் போட்டிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி செப்ரெம்பர் 10 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. மேலதிக விவரங்களை 0776624377 தொலைபேசி இலத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# 3 நூல்களின் வெளியீடு

ஜேர்மனியை வசிப்பிடமாகக் கொண்ட மாலினி மாலாவின் மூன்று கவிதை நூல்களின் வெளியீடு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் அரியாலை சரஸ் வதி சனசமூக நிலைய மண் டபத்தில் முன்னாள் அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

வடகோவை வரதராஜன், தேவநாயகம் தபேந்திரன் ஆகியோர் சிறப்புரை ஆற்றுவர்.

'குச்சொழுங்கைகள் காத்திருக்கின்றன' 'நான் எனும்நீ', 'மௌனம் எனும் பேரோசை' ஆகிய நூல்களே இன்று வெளியிட்டு வைக்கப்படவுள்ளன.

(உ)

# வவுனியாவில் வறட்சி காரணமாக 9,516 செய்கையாளர்கள் பாதிப்பு!

வவுனியாவில் வறட்சி காரணமாக ஒன்பதாயிரத்து 516 மேட்டு நில பயிர்செய்கையாளர்கள் பாதிப்படைந்துள்ளனர். அவர்களுக்கு நிவாரணத்தை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் மாவட்ட இணைப்பாளர் பி.தனராஜ் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட வறட்சி நிலை தொடர்பில் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

நாட்டில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக வவுனியா மாவட்டமும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் வவுனியா மாவட்டத்தில் ஒன்பதாயிரத்து 516 மேட்டு நில பயிர்ச்செய்கையாளர்கள் பாதிப்படைந்துள்ளனர்.

வறட்சி காரணமாக பலர் மேட்டு நில பயிர்செய்கையில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன், பயிர்ச்செய்கை மேற்கொண்டசிலரின் பயிர்களும் அழிவடைந்துள்ளன.

இதன்படி வவுனியா பிரதேச செயலக பிரிவில் நான்காயிரத்து 437 பேரும், வவுனியா வடக்கு பிரதேச செயலக பிரிவில் ஆயிரத்து 351பேரும், வவுனியா தெற்கு பிரதேச செயலக பிரிவில் ஆயிரத்து 323 பேரும், வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் இரண்டாயிரத்து 405 பேரும் பாதிப்படைந்துள்ளனர்.

இவர்களுக்கான வறட்சி நிவாரணத்தை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(சு-100)

# பின்தங்கிய நிலையில் காணப்படும் ஐயன்கன்குளம் வைத்தியசாலை!



முல்லைத்தீவு, செப்.01

முல்லைத்தீவு–துணுக்காய் பிரதேசத்திற்கு உட்பட்ட ஐயன்கன்குளம் வைத்தியசாலை பின்தங்கிய நிலையில் உள்ளதால் நிரந்தரமான வைத்தியரை நியமிப்பதில் பெரும் பிரச்சினை காணப்படுகிறது என பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலை மிகவும் பின்தங்கிய பிரதேசத்தில் காணப்படுகின்றது. இதற்கான வைத்திய வெற்றிடத்தை வெளிப்படுத்தி வருகின்ற போதும், இதுவரை வைத்தியர்கள் எவரும் சேவை செய்ய முன் வரவில்லை.

இதே வேளை ஐயன்குளத்தில் இருந்து மல்லாவி வைத்தியசாலை வரைக்குமான வீதி மிக மோசமாக சேதமடைந்திருப்பதனால் நோயாளர் காவுவண்டியும் பழுதடையும் நிலையில் காணப்படுகின்றது. இங்குள்ள மக்கள் தமக்கான மருத்துவ தேவையை பெறு வதில் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பில், கடந்த 13 ஆம் திகதி துணுக்காய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் போதும் பொதுமக்கள் பிரதிநிதிகள் மற்றும் பிரதேச பொது அமைப்புக்களாலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# வவுனியாவில் ரூ.5,000 கள்ள நோட்டுடன் இளைஞர் கைது

வவுனியாவில் வர்த்தக நிலையம் ஒன்றில் பொருள்கள்கொள்வனவு செய்துவிட்டு 5ஆயிரம் ரூபா கள்ள நோட்டை வியாபார நிலையத்திற்கு கொடுத்தவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வேப்பங்குளம், பட்டாணிச்சூர் பகுதியிலுள்ள வியாபார நிலையம் ஒன்றில் மோட்டார் சைக்கிளுக்கான உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்துவிட்டு 5 ஆயிரம் ரூபா கள்ள நோட்டை வர்த்தக நிலையத்திற்கு வழங்கியுள்ளார்.

இதன்போது, இந்த 5 ஆயிரம் ரூபா நோட்டில் வர்த்தக நிலைய உரிமையாளருக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து வர்த்தக நிலைய உரிமையாளரால் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் 5 ஆயிரம் ரூபா வைத்திருந்த 24வயதுடைய நபரைக் கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

(சு-100)

காலைக்கதிர்
Kalaikkathir
செய்திகள்
சனிக்கிழமை 01.09.2018





தமிழ் மக்கள் பேரவையின் செயலகம் யாழ்ப்பாணம், பலாலி வீதி, கந்தர்மடத்தில் நேற்று மாலை திறந்துவைக்கப்பட்ட நிகழ்வின் போது...

# நாடகமும் அரங்கியலும் 2 நாள் பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம்,செப்.01

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் கடந்தபல ஆண்டு களைப் போல் இவ்வாண்டும் கா.பொ.த. உயர்தரப் பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத் தில் எழுத்துப்பரீட்சைக்கு தோற்றி விரைவில் செய்முறைப் பரீட்சைக் குத்தோற்றவுள்ளமாணவர்களுக் கான இரு நாள் பயிற்சிப்பட்டறை இம்மாதம் 08ஆம், 09ஆம் திகதிகளில் காலை 9.00 மணி முதல் மாலை 2.30 மணிவரை இல.286, பிரதானவீதி, யாழ்ப் பாணத்தில் அமைந்துள்ள திரு மறைக் கலாமன்றத்தின் கலைத் தூது கலையகத்தில் நடைபெற வுள்ளது.

இப்பயிற்சிநெறியில் பங்கு பற்ற விரும்பும் மாணவர்கள் இம் மாதம் 07ஆம் திகதி வெள்ளிக் கிழமைக்கு முன்னதாக யாழ். திருமறைக் கலாமன்ற அலுவல கத்தில்தமதுபெயர், விவரங்களை பதிவுசெய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.(ஐ)

# விலை போய்விட்டது தமிழ்க் கூட்டமைப்பு

## வடமராட்சி வடக்கு மீனவர்கள் சாடல்

(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், செப்.01

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விலை போனமையாலேயே மீன வர்களின் பிரச்சினை தொடர்பாக நாடாளுமன்றத்தில்பேசுவதில்லை என வடமராட்சி வடக்கு மீனவர் சமாசம் குற்றம் சாட்டியுள்ளது.

இழுவைப் படகு தொழில் முறையைப் தடை செய்யும் சட்டத்தை சுமந்திரனே கொண்டு வந்துவிட்டு தற்போது அதனை அவரே நடைமுறைப்படுத்தாமல் தடுத்து வைத்திருக்கிறார் எனவும் அது கூறியுள்ளது.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியா ளர்கள் சந்திப்பிலேயே வடமாட்சி வடக்குமீனவர் சமாசத்தின்தலை வர் வர்ணகுலசிங்கம் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்க கையில்–

வடமராட்சி மீனவர்களின் பிரச்சினை தொடர்பாகச் சந்திப் பதற்கு நேரம் ஒன்றை வழங்கிக் கொழும்புக்குவருமாறு சுமந்திரன் அழைத்தார். நாம் சென்றதும் எம்மைச் சந்திக்காது விட்டுவிட் டார். இதன் பின்னர் எமது மீன வர்கள் இப் பிரச்சினையால் வாழ முடியாத நிலை ஏற்பட்டுச் சாவ தற்குக் கூட்டமைப்பே காரணம் என வடக்கு மாகாண சபை உறுப் பினர் சுகிர்தனுடன் பேசிய பின் னரே சுமந்திரன் சந்திக்கச் சந்தர்ப் பம் தந்தார்.

சுமந்திரனுடன் நாம் பேசும் போது முதலில் இழுவைப் படகு தொழில் முறை தொடர்பாகவே பேசியிருந்தோம். குறிப்பாக இழு வைப்படகு தொழில் முறையைத் தடை செய்ய வேண்டும் எனச் சட்டத்தை நீங்களே கொண்டு வந்த பின்னர் அதனை அமுல் படுத்துவதையும்நீங்களேதடுத்து வைத்திருக்கின்றீர்களே எனக் கேட்டோம்.

இதற்கு சுமந்திரன், தனக்கு தெரியாதுஎனக்கூறினார். இதற்கு நாம் கடற்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீரவே நீங்கள் தான் இதனைத் தடுத்து வைத்தி ருக்கிறீர்கள் என எமக்கு தெரிவித் தார் எனக் கூறிய போதும், தான் அவ் வாறு செய்யவில்லை என வும், ஏன் இன்னமும் அச்சட் டத்தை அமுல்படுத்தவில்லை என கேள்வி எழுப்பியதாகவும் தெரிவித்தார்.

ஆனால் ஏன் நீங்கள் இது வரை ஏன் இந்த விடயத்தை நாடாளுமன்றத்தில் கேட்க வில்லை எனக் கேட்ட போதும், இது தொடர்பாக தான் விளக்கம் கோரியுள்ளளார் எனவும் அவ் வாறு பதில் தரவில்லை எனில் வழக்கு போடப்போவதாகவும் சுமந்திரன் தெரிவித்தார்.

அவ்வாறாயின் இப்போதே அதற்கு வழக்கு போடுங்கள் என நாங்கள் கூறிய போதும் அதற்கு ஒரு மாத காலம் தவணை வழங்கி யிருப்பதாகக் கூறி மழுப்பலான பதிலையே சுமந்திரன் தெரிவித் தார்.

இவ்வாறு எமது மீனவர் களது பிரச்சினை தொடர்பாக கூட்டமைப்பின் 16 நாடாளு மன்ற உறுப்பினர்களில் எவரும் கேள்வி கேட்பதில்லை. அதே போன்றே எந்தவொரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரும் எமது பிரச்சினை தொடர்பாக பேசுவதில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி யாக உள்ள போதும் எமது பிரச்சினை தொடர்பாக இவர்கள் பேசுவதில்லை. இதற்குக்காரணம் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் கள் அனைவரும் விலை போய் விட்டனர். – என்றார்.

## இனி இது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உருவாக்குவதற்கானஅரசமைப்பு வழிகாட்டல் குழு சுமார் எண்பது தடவைகள் கூடி, மரதன் அமர்வு களை நடத்தி, பல நூறு மணித்தி யாலங்கள் செலவிட்டு, ஒரு டசி னுக்கும் மேற்பட்ட நிபுணர்க ளின் கடும் உழைப்புடன், பல தடவைகள் மாறி மாறி நகல் வடிவங்களை ஆக்கியும், மாற் றியும், திருத்தியும், புதுக்கியும் நடவடிக்கை எடுத்து, இப்போது கிட்டத்தட்ட புதிய அரசமைப்புக் கான நகல் வடிவம் என்று கூறத் தக்க விதத்தில் ஒரு யோசனைத் திட்டத்துடன் வந்துவிட்டது.

எதிர்வரும் வியாழக்கிழமை வழிகாட்டல் குழு மீளவும் கூடு கின்றது. அன்றைய தினத்துடன் மேற்படி யோசனைத் திட்டத்திலி ருந்து இறுதி நகல் வடிவத்தை பூர்த்தி செய்து விடுவது என் றும் –

அரசமைப்பு நகல் வடிவத் துக்கான வழிகாட்டல் குழுவின் கடைசிக் கூட்டம் அதுவாகத்தான் இருக்கும் என்றும் –

அந்த அரசமைப்பு நகலை, அடுத்து அரசமைப்புக் கவுன் ஸிலாக நாடாளுமன்றம் விரை வில் மீண்டும் கூடும்போது அதன் பரிசீலனைக்கு வழங்கு வது என்றும் –

தீர்மானிக்கப்பட்டதாகக் கூறப் படுகின்றது.

ஆனால் இவை எல்லாம் நடக்குமா என்பதே இப்போதுள்ள கேள்வியாகும்.

இதுவரை காலம் சுதந்திரக் க ட்சி, கூட்டு எதிரணி போன்ற தரப்புகள் புதிய அரசமைப்பு முயற்சிகள் குறித்து முணு முணுத்து வந்தாலும் – எதிர்ப்புக் காட்டி வந்தாலும் – குறை கூறி வந்தாலும் – ஜே.வி.பி. தவிர்ந்த ஏனைய தரப்புகள் எலலாம் அந்த அரசமைப்பு உருவாக்க முயற்சியில் ஈடுபாடு காட்டி வந்தன. அரசமைப்பு உரு வாக்க வழிகாட்டல் குழுவின் கூட் டங்களில் பங்குபற்றி, ஊடாடி, கருத்துக்களைப் பரிமாறி, பங் காளியாகச் செயற்பட்டு வந்தன.

ஆனால் எதிர்வரும் 6 ஆம் திகதி புதிய அரசமைப்பு யோச னைத் திட்டத்தை இறுதி நகல் வடிவமாக உருவாக்கும் கடைசிக் கூட்டத்துக்கு கூட்டு எதிரணித் தரப்பு வருமா என்பதுதான் கேள்வி.

அதற்கு முதல்நாள் – அதா வது அடுத்த 5 ஆம் திகதி புதன் கிழமை – நல்லாட்சி அரசுக்கு எதிரான பெரும் போராட்டம் மூலம் கொழும்பை ஸ்தம்பிக்க வைக்கும் தீர்மானத்தில் இருக் கின்றது கூட்டு எதிரணி. அந்தப் போராட்டம் பெரு வெற்றியீட்டி, மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதற் கான முழு ஊக்கத்தை தருவ தாக அதன் பெறுபேறு அமையும் என்றால், அடுத்த நாள் நடக்க விருக்கும்அரசமைப்புவழிகாட்டல் குழுவுக்கும், புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளுக்கும் கூட்டு எதிரணி 'பெப்பே' காட்டி விடும் என்கின்றன கொழும்பு அரசியல் வட்டாரங்கள்.

அதாவது புதிய அரசமைப்பு நகல் வடிவத்தை எட்ட, அந்த முயற்சிகளிலிருந்து கூட்டு எதி ரணி வெளியேறுகின்றமையை 'வெண்ணெய் திரள தாய்ச்சி உடைந்த கதை' என்று கூறுவது தப்பில்லைத்தானே...!

★ ★ ★

முதலமைச்சர் சி.வீ.விக் னேஸ்வரன் நேற்று மாலை தமிழ் மக்கள் பேரவையில் ஆற் றிய உரை – அது ஆற்றப்படு வதற்கு முன்னரே – பெரும் எதிர்பார்ப்பைத் தந்திருக்கும் போல...!

முன்னாள் அதிகாரத் தரப் பாரும், எதிர்காலத்தில் அதிகாரத் துக்கு வருவார் என்று கருதப்படும் தரப்பாரும் முதல்வர் விக்கி என்ன கூறுகின்றார் என்பதை அறிய ஆவலாகவிருந்திருக் கின்றார்கள் என்று தெரிகின்றது.

இருவருக்கும் மிக நெருங்கிய வர்கள் சற்று நேர இடைவெளி யில் நேற்றிரவு என்னுடன் தொடர்பு கொண்டனர்.

*"உங்களிடம் கேட்டால்விவரம் தெரியும் என்று பெரியவர் கூறி னார்."* – என்ற சாரப்பட இரு தரப்பினருமே ஒரே மாதிரிக் குறிப்பிட்டு விடயங்களை என் னிடம் கேட்டறிந்தனர்.

முதல்வர் விக்கியின் உரை யின் ஆங்கில மொழி பெயர்ப்புக் கிடைக்காதா என்று இரு தரப்பி னருமே கேட்டனர். அவரவர் ஊடகப் பிரிவு மூலம் மொழி பெயர்த்துப் பெற்றுக் கொள்ளுங் களேன், அது உங்களுக்குப் பெரிய வேலையா என்று கேட் டேன்.

*"இல்லை. அதற்கு நேரம் எடுக்கும் உடனடியாகப் 'பெரிய வர்' வாசித்து அறிய அது வச திப்படாதே"* – என்றனர் இரு தரப்பு தொடர்பாளர்களும்.

விக்கியின் தீர்மானம் யாது என்பதை அறிவதில் நாட்டின் உயர்மட்டங்களும் தீவிர கரி சனையுடன் இருக்கின்றன என் பதை அவரின் உரை பற்றிய செய்தியை அறிவதில் அத் தரப்புகள் காட்டிய அவசரம், ஆர்வத்திலிருந்து என்னால் ஊகித்துக் கொள்ள முடிந்தது.

ஆனால், முதல்வர் விக்கியோ திட்டவட்டமாக ஒரு தீர்மானம் எடுக்காமல், 'கிளைமாக்ஸ்' காட் சியை மேலும் மேலும் இழுத்து, பரபரப்பைத் தீவிரமாக்கி, தரப் புகளை 'டென்ஷனில்' வைத்தி ருக்கும் வேலையை ஆற, அமரத் தொடர்கின்றார்...!

- மின்னல்

## நாளை பகல் இசை அர்ச்சனை

யாழ்ப்பாணம், செப்.01

நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவத்தை ஒட்டி ஒவ்வொரு கார்த்திகைத் திருவிழாவன்றும் இரவில் நடைபெறும் இசை அர்ச்சனை இம்முறை கார்த் திகைத் திருவிழாவான நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலயத்தின் உள் வீதி யில் நடைபெறும்.

மிருதங்கம், வயலின், வீணை, புல்லாங்குழல், வாய்ப்பட்டு, ஆர் மோனியம் ஆகிய ஆறு இசை கள், உள்வீதியில் ஆறு திசை களில் இருந்து ஒலிக்க இசை அர்ச்சனை இடம்பெறும். (உ)

## வெள்ளவத்தையில் திருட்டு

கொழும்பு, செப்.01

கொழும்பு, வெள்ளவத்தையில் ஸ்ரேஷன்வீதி, பொஸ்வெல் பிளேஸ் போன்ற பகுதிகளில் உள்ள ஐந்து தொடர்மாடி வீடு களில் கடந்த செவ்வாய் அதி காலை திருடர்கள் தமது கை வரிசையைக் காட்டியிருக்கின்ற னர் என்று கூறப்படுகின்றது.

பல லட்சம் ரூபா பெறுமதி யான நகைகளும், ரொக்கமும், விலையுயர்ந்த பொருள்களும் சூறையாடப்பட்டிருக்கின்றன என வெள்ளவத்தைப்பொலிஸார் தெரிவித்தனர். (உ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கான ஒரே மார்க்கம்

தன்னுடைய மக்கள் செல்வாக்கு – ஆதரவு – குறித்து அச்சம் கொண்டுள்ள ஆட்சித் தரப்பு அதனால் தேர்தலைச் சந்திக்கப் பின்னடிக்கின்றது. ஜனநாயக ரீதியில் மக்களுக்கு முகம் கொடுக்க அஞ்சி ஓடித் தப்ப – அல்லது ஓடி ஒளிய – முயல்கின்றது.

மாகாண சபைத் தேர்தல்களை நடத்தாமல் நழுவுவதற்கு ஆட்சித் தரப்பு எடுக்கும் முயற்சி அப்பட்டமானது; வெளிப்படையானது. அது என்ன காரணத்தை – சாட்டுப் போக்கை – கூறினாலும், மக்களுக்கு உண்மை தெரியும்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான பற்றுறுதி – மக்களுக்கு அவர்களுக்குரிய ஜனநாயக உரிமையை வழங்கும் திடசங்கற்பம் – இந்த அதிகாரத் தரப்புக்கு இல்லை என்பது மூடிமறைக்க முடியாத நிதர்சனம்; யதார்த்தம்.

மாகாண சபைத் தேர்தல்களை கடந்த வருடம் வரையில் நடத்துவதற்கான ஒரு சட்டம் இந்த நாட்டில் இருந்தது. அதை செயலிழக்க வைத்து, புதிய முறையில் தேர்தல் நடத்தவதற்கு வழி செய்யும் புதிய சட்டம் ஒன்றை இந்த அரசு கடந்த ஆண்டில் கொண்டு வந்தது. ஆனால் அந்த புதிய முறைமைக்கு வழி செய்யும் சட்ட ஏற்பாடுகள் இதுவரை பூர்த்தியாகவில்லை. அந்த முறைமைக்கு வழிசெய்யும் மாகாணத் தேர்தல் எல்லை நிர்ணய அறிக்கையை நாடாளுமன்றம் இப்போது நிராகரித்திருப்பதன் காரணமாக அந்த முறைமை நடைமுறைக்கு வருவது தடைப்பட்டுப் போய்விட்டது.

அதாவது, இப்போது மாகாணசபைத் தேர்தலை எப்படி நடத்துவது என்பதற்கான நடைமுறையை வழிப்படுத்தும் சட்டம் ஏதும் நாட்டில் இல்லை. அதனால் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாது என்ற நிலைமை நீடிக்கின்றது.

மாகாண சபைத் தேர்தல்களுக்கான எல்லை நிர்ணய அறிக்கை அடியோடு நிராகரிக்கப்பட்டிருப்பதால் அந்த விடயம் குறித்து ஆராய்வதற்காக பிரதமர் தலைமையில் ஐவர் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு இரண்டு மாத கால அவகாசம் வழங்கப்பட்டிருக்கின்றது.

இரண்டு மாத முடிவில் அந்தக் குழு ஏற்புடைய தீர்வு ஏற்பாடு ஒன்றுடன் வரும் என்பதற்கோ, அதனை நாடாளுமன்றம் ஏற்கும் என்பதற்கோ எந்த உத்தரவாதமும் இல்லை.

தேர்தலை நடத்தாமல் – மக்களின் வாக்குகள் மூலமான தீர்ப்புக்கு முகம் கொடுக்காமல் – ஒளித்தோடும் அரசுத் தரப்பின் எத்தனத்துக்கு உரமூட்டும் ஒரு விடயமாகவே இந்த ஐவர் குழு அமைப்பும் அதற்கான இரண்டு மாத கால அவகாசமும் அமைந்திருக்கின்றன என்பதும் புரிந்து கொள்ளத்தக்கதே.

இப்போது இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணக்கூடிய ஒரே வழி, மீண்டும் பழைய தேர்தல் முறைமையைக் கொண்டு வந்து அதனடிப்படையில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதுதான்.

மாகாண சபைகளுக்கான தேர்தல்களுக்குரிய சீர்திருத்தங்களுக்கு முயற்சிகள் ஒரு புறம் நடக்கட்டும். அதற்கான காலம் கூடி வரும்போது அதனை நடைமுறைப்படுத்திச் செயற்படுத்தலாம்.

அதுவரையில், கடந்த ஆண்டில் செயலிழக்கச் செய்யப்பட்ட சட்டத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வந்து அதனடிப்படையில் தொடர்ந்து மாகாண சபைத் தேர்தல்களை நடத்தலாம். புதிய சீர்திருத்தச் சட்டம் சாத்தியமாகும் போது மீண்டும் பழையதைச் செல்லுபடியற்றதாக்கி விலக்கலாம்.

கடந்த ஆண்டில் நாடாளுமன்றத்தினால் செல்லுபடியற்றதாக்கப்பட்ட – அப்போதைய – மாகாண சபைத் தேர்தல் சட்டத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வருவது எங்ஙனம் என்று ஒரு கேள்வி எழலாம்.

ஒரு வரி சட்டப் பிரேரணை ஒன்றை சாதாரண பெரும்பான்மையுடன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதன் மூலம் அதை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவரலாம் என உறுதிப்படுத்துகின்றன சட்ட வட்டாரங்கள்.

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து இந்த நாட்டில் நடைமுறையில் இருந்த குடியியல் நடைமுறைச் சட்டக் கோவை 1975ஆம் ஆண்டில் அப்போதைய சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசினால் கொண்டுவரப்பட்ட 25 ஆம் இலக்க நீதி, நிர்வாக (திருத்தச்) சடத்தின் மூலம் புறமொதுக்கப்பட்டது.

ஆனால், 1977இல் மீண்டும் ஜெயவர்த்தனா அரசு ஆட்சிக்கு வந்ததும் பழைய குடியியல் நடைமுறைச் சட்டக் கோவை 1977 டிசெம்பர் 15இல் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மூலம் மீண்டும் பழையபடி நடைமுறைக்கு வந்தது. இன்றுவரை அது நடைமுறையிலும் உள்ளது.

அந்த முறைமைப்படி பழைய மாகாண சபைத் தேர்தல் சட்டத்தை மீளக் கொண்டுவந்து அதற்கு உயிர்ப்புக் கொடுப்பதே இத்தேர்தல்களை மேலும் தாமதாக்காமல் நடத்துவதற்கு இப்போதுள்ள ஒரே மார்க்கமாகும்.

## சமூகச் சீர்கேட்டில் ஈடுபடும் பெண்களுக்கு எதிராக வவுனியாவில் கவனவீர்ப்புப் போர்




சமூகச் சீர்கேட்டில் ஈடுபடும் பெண்களுக்கு எதிராக வடக்கு மாகாண பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் வவுனியாவில் நேற்று முன்தினம் எதிர்ப்புப் போராட்டமொன்று இடம்பெற்றது.

தாயாகப் போற்றப்படும் பெண்கள் இன்று கேவலமாக இழிவுபடுத்தப்படுகின்றார்கள். இவ்வாறு கேவலப்படுத்தி வரும் பெண்களுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும், தங்கள் நிர்வாணப் படங்களை இணையத்தளங்களில் வெளியிடும் பெண்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும், பாடசாலை மாணவர்களிடையே நிலவும் போதைப்பொருள் மற்றும் சிமாட்போன் பாவனை, மாலை நேர வகுப்புக்கள் முற்றாகத் தடை செய்யப்பட வேண்டும், எதிர்வரும் சமூகம் பாதிப்புக்கு உள்ளாகாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வவுனியா நகர சபைக்கு முன்பாக ஆரம்பமான இந்தப் போராட்டமானது ஏ-9 வீதியூடாக வவுனியா, மன்னார் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் காரியாலயத்தைச் சென்றடைந்தது.

போராட்டத்தின் இறுதியில் போராட்டக்காரார்கள் வவுனியா, மன்னார் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர அபயவிக்கிரமவிடம் மனு ஒன்றையும் கையளித்தனர் .(ஐ)

## காணாமற்போனோர் விடயத்தில் சர்வதேச பொறிமுறையே தேவை

### ஐ.நா.வில் எடுத்துரைக்கவுள்ளார் அனந்தி



இந்த செப்ரெம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் தொடர்பான கூட்டத் தொடர் நடைபெறவுள்ள நிலையில் காணாமற்போனோர் விடயத்தில் சர்வதேச நீதிப்பொறிமுறையை மீண்டும் வலியுறுத்தவுள்ளதாக வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சியில் இடம்பெற்ற சர்வதேச காணாமற்போனோர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையில் யுத்தம் முடிவடைந்து 9 வருடங்கள் கடந்த நிலையில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான எந்தவொரு வினைத்திறனான கடமையையும் அரசு ஆற்றாமல் இருக்கின்றது. பலகோடி ரூபா செலவில் ஆணைக்குழுக்களை அமைத்தும் காணா மல் ஆக்கப்பட்டோர் தொடர்பான எந்தவொரு முடிவையும் அரசு எடுக்கவில்லை.

இந்நிலையில், ஐ.நா. கூட்டத் தொடருக்குச் செல்லும் நாங்கள் அரசின் காலக்கெடு காலத்திலும் அவர்கள் எந்தவொரு காத்திரமான நடவடிக்கையையும் மேற்கொள்ள வில்லை என்பதைத் தெரிவிக்கப் போகின்றோம். இவ்வாறு தாமதிக்கப்படுகின்ற நீதியானது உண்மையை இல்லாமல் செய்கின்ற செயற்பாடாகவே கருத முடிகிறது.

சர்வதேசத்தை ஏமாற்றுவதற்கு எடுக்கப்பட்ட காலக்கெடு எதிர்வரும் மார்ச் மாதத்துடன் முடிவடையவிருக்கின்றது. இதே வேளை எதிர்வரும் செப்ரெம்பரில் இடம்பெறவுள்ள மாநாடு காணாமற்போனோர் விடயம் தொடர்பில் ஒரு தீர்மானம் மிகு அறிக்கையை மனித உரிகைள் ஆணையாளர் தயாரிக்க ஏதுவான காலமாக அமைகின்றது.

ஆனாலும் பாதிக்கப்பட்ட தரப்பைச் சர்வதேசம் ஒரு பிரதான தரப்பாக கருதவில்லை. ஆனால் இலங்கை அரசை ஒரு தரப்பாகச் சர்வதேசம் ஏற்றுள்ளது. இது தொடர் பில் பாதிக்கப்பட்ட எங்களுக்கு எமது பிரச்சினைகளைப் பேச சமவாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். அதற்குப் பாதிக்கப்பட்ட மக்களிடத்திலிருந்தும் பிரதிநிதிகள் வரவேண்டும்.

சர்வதேசம் எமது பிரச்சினைகளை உள்வாங்கி எமக்கான பிரச்சினைகளைப் பெற்றுத்தரும் என்றே நாம் போராடுகின்றோம். நிச்சயமாக ஒன்றுபட்டு நாம் வலுவான அழுத்தங்களை கொடுக்க வேண் டும். அவ்வாறு சர்வதேசத்துடன் இணைந்த நீதிப்பொறிமுறையே எங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதியைப் பெற்றுத்தரும் என்று நம்புகின்றோம். – என்றார்.

(ஐ)

## கூட்டமைப்பில் உள்ள உட்கட்சிப் பூசலே மாகாண சபைச் சிக்கலுக்கு காரணம்

### உறுப்பினர் தவநாதன் குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் உள்ள உட்கட்சி அரசியல் பிரச்சினைகளே வடக்கு மாகாண சபையின் இன்றைய நிலைமைகளுக்கு காரணமெனச் சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன் குற்றஞ்சாட்டினார்.

மாகாணசபையின் அமர்வு நேற்று முன் தினம் இடம்பெற்றது. இதன்போது அமைச்சர்கள் விவகாரம் குறித்து வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. இதன் போது உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கூட்டமைப்புக்குள் கட்சி ரீதியாக உள்ள பல பிரச்சினைகள் வேறு விதமாகத் திசை திருப்பப்பட்டுச் செல்கின்றன. அதனாலேயே மாகாண சபையிலும் இந்த நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. அமைச்சர்கள் விவகாரத்தில் ஊழல் நடந்ததா இல்லையா என்பது கட்சிப் பிரச்சினையாகவே காணப்படுகின்றது.

முதலமைச்சரை, அதனைச் செய் இதனைச் செய்யாதே என்று சொல்ல முடியாது. ஏனெனில் இன் றைக்கு ஆளுங்கட்சியாக உள்ள கூட்ட மைப்புக்குள் தான் பிரச்சினைகள் இருக்கின்றன. ஆகவே அதனைத் தீர்த்து வைக்கவேண்டியது கூட்டமைப்பும் அதன் தலைமையும் தான். ஆனால் அதனைச் செய்யாமல் விட்டு விட்டு இந்தச் சபையில் வந்து அடிபிடி சண்டையிட்டுக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

நாங்கள் எமது மக்களின் பிரச்சினைகள் குறித்து பலவற்றை இங்கு பேச வேண்டி இருக்கின்றபோதும் அதனைச் செய்ய முடியாது இருக்கின்றது. ஏனெனில் அமைச்சர் விவகாரத்தில் கூட்டமைப்புக்குள் ஏற்பட்டுள்ள பிரச்சினையால் ஒவ்வொரு அமர்வுகளிலும் அந்த விடயம் தொடர்பில் பேசியே நேரமும் காலமும் முடிவடைகிறது.

எமக்கு இன்னமும் ஒன்றரை மாதங்களே இருக்கின்ற நிலையில் கூட்டமைப்புக்குள் பேசி இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக் கொண்டு மக்களுக்கான சேவைகளைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும். அதனை விடுத்து அடுத்து வரும் அமர்வுகளிலும் இந்த அமைச்சர் விடயத்தைப் பற்றியே பேசிக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. – என்றார்.

(ஐ –7)

**நாளை**

02.09.2018
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம் : கார்த்திகை மு.இ 6.43 வரை
திதி : ஸப்தமி மா. 5.41 வரை
சுபநேரம் :9.05 – 10.35 வரை
இராகுகாலம் : 4.35 – 6.05 வரை

காலைக்கதிர் Kalaikkathir



# இடைக்கால அறிக்கையை செப்ரெம்பர் 5 இல் காணமற் போனோர் அலுவலகம் சமர்ப்பிக்கும்

## அதன் தலைவர் சாலிய பீரிஸ் அறிவிப்பு

எமது அலுவலகம் இடைக் கால அறிக்கையொன்றினை தற்போது சமர்ப்பிக்க முன்வந் துள்ளது. அந்தவகையில், 5 ஆம் திகதி ஜனாதிபதியிடம் இந்த அறிக்கை கையளிக்கப்படவுள் ளது என காணாமற்போனோ ருக்கான அலுவலகத்தின் தலை வரும் ஜனாதிபதி சட்டத்தரணியு மான சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

அத்துடன் இலங்கையில், காணாமல் ஆக்கப்பட்ட நிகழ் வுகள் இடம்பெற்றுள்ளன என் பதை ஏற்றுக்கொள்கிறோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இதனை ஏற்றுக் கொண்டு காணாமற்போனோ ருக்கான நினைவுத்தூபி யொன்றை அமைக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

காணாமல்ஆக்கப்பட்டோருக் கான தினத்தை முன்னிட்டு கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

லத்தீன் அமெரிக்க நாடுக ளிலேயே முதலில் காணாமல் போனோர் அலுவலகம் அமைக் கப்பட்டது. அதன் பலனாக ஐ.நா. சபையால் காணாமல் ஆக்கப்பட் டோருக்கான தினம் பிரகடனப் படுத்தப்பட்டது.

காணாமற்போனோருக்கான சர்வதேச தினம் நேற்று முன்தி னம் இலங்கையிலும் அனுஷ்டிக் கப்பட்டுள்ளது. இதனால், இந்த நாட்டிலும் காணாமல் ஆக்கப்பட் டவர்கள் உள்ளனர் என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

அத்தோடு, நாடாளுமன்றத் தில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளமையால் இலங்கை அரசாங்கமும் அதனை ஏற்றுக்கொண்டு, காணாமல் ஆக்கப்படுதலை குற்றமாகவே அறிவித்துள்ளது.

காணாமல் ஆக்கப்படுதல் இடம்பெறும் நாடுகளில் இலங்கை முன்னணி வகிக்கின் றது. காணாமல் ஆக்கப்பட்டவர் களின் உறவினர்களுடைய வேத னையை நாமும் அறிவோம். அவர்களின் வாழ்வாதாரப் பிரச்சி னைகள் குறித்தும் நாம் அறி வோம். நான்கு தசாப்தங்களாக இலங்கையில் காணாமல் ஆக் கப்படுத்தல் இடம்பெற்றுள்ளமை யை ஏற்றுக்கொள்வதால் மாத்திரமே நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும். துரதிர்ஷ்டவ சமாக அதனை ஏற்காதவர்க ளும் நாட்டில் உள்ளனர்.

குறிப்பாக, திருகோணமலை உள்ளிட்ட பகுதிகளில் மூவி னத்தை சேர்ந்தவர்களினதும் உறவினர்கள் காணாமல் ஆக் கப்பட்டுள்ளனர். அரச தரப்புக்க ளாலும் மற்றைய சில குழுக்களி னாலும் காணாமல் ஆக்கப்ப டுதல் செயற்பாடுகள் நிகழ்ந்துள் ளன என்பதே உண்மையாகும்.



இவ்வாறான, நிலையில் இலங்கையில் காணாமல் ஆக் கப்பட்டோருக்கான அலுவலகம் நிறுவப்பட்டுள்ளமை ஒரு மைல் கல்லாகும். இது ஒரு ஆரம்பம் மட்டுமே. எமது அலுவலகம் இடைக்கால அறிக்கையொன்றை தற்போது சமர்ப்பிக்க முன்வந் துள்ளது. அந்த வகையில், 5 ஆம் திகதி ஜனாதிபதியிடம் இந்த அறிக்கை கையளிக்கப்படவுள் ளது.

அந்த அறிக்கையின் பரிந் துரைகளை அரசு நடைமுறைப் படுத்தும் என்றே நாம் நம்புகி றோம். எமது இந்த அறிக்கையில், காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பத்தினருக்கு நிவார ணங்களை வழங்குதல், அவர் களின் உறவுகள் பற்றிய விசார ணைகள் இடம்பெறும் காலப் பகுதியில் அவர்களுக்கான இடைக்கால கொடுப்பனவு வழங் குதல் போன்றவற்றை நாம் பரிந்துரைத்துள்ளோம்.

மேலும், காணாமல் ஆக் கப்படுதலை ஏற்றுகொண்டு காணாமல் ஆக்கப் பட்டவர்களுக்கு நினைவுத்தூபி அமைக்க வேண்டும் என்ற பரிந் துரைகளும் இந்த இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளோம்.

ஆனால், மேற்படி காரணங் களால் காணாமல் ஆக்கப்பட் டவர்களின் உறவினர்கள் உண்மையை அறிவதற்குஉள்ள உரிமை மறுக்கப்படக்கூடாது என்பதையும் ஆழமாக வலியு றுத்தியுள்ளோம். எவ்வாறாயி னும், காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பிலான சர்வதேச பரிந் துரைகளையும் பலப்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# நவுறு தடுப்பு முகாமை நிரந்தரமாக மூடுக!

## 80 அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் வலியுறுத்தல்

ஆஸ்திரேலியாவின் நவுறு தீவில் அடுத்த வாரம் பசுபிக் தீவுகளைச் சேர்ந்த 18 நாடுக ளின் தலைவர்கள் மாநாடு ஆரம்பமாக உள்ளது.

இந்த நிலையில், நவுறு தடுப்பு முகாமை மூடுமாறு இம் மாநாட்டில் வலியுறுத்த வேண் டும் என தொண்டு அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இந்த மாநாடு நாளை மறு தினம் 3ஆம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்கும் 18 நாடுக ளின் தலைவர்களும் ஆஸ்திரே லிய அரசால் நிர்வகிக்கப்படும் நவுறு தடுப்பு முகாமை நிரந்த ரமாக மூடுவதற்கான அழுத்தங் களை வழங்க வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை உள்ளிட்ட 80 அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் வலி யுறுத்தியுள்ளன என ஆஸ் திரேலிய ஊடகம் ஒன்று தெரி வித்துள்ளது.

நவுறு தடுப்பு முகாமில் மட் டும் சிறுவர்கள் உட்பட 200 இற்கும் மேற்பட்டவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என ஆஸ் திரேலிய அகதிகள் செயற் பாட்டு அமைப்பு தெரிவித்துள் ளது.

இந்த நிலையில், தொண்டு அமைப்புக்கள் நவுறு தடுப்பு முகாமை 'Australia's Guantanamo' என வர்ணித் துள்ளது. அங்கு வாழும் அனை வரும் மிக மோசமான நிலையில் மன அழுத்தத்திற்கு உள்ளா கியுள்ளனர் என சுட்டிக்காட்டி யுள்ளனர்.

இதேவேளை, 3 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும் மாநாடு தொடர்பில் செய்தி சேக ரிக்கச் செல்லும் ஊடகவி யலாளர்கள், நவுறு தடுப்பு முகாம் மற்றும் அங்குள்ள அகதி கள் தொடர்பில் செய்தி சேகரிக்க முடியாதவாறு நவுறு அரசு தடைவிதித்துள்ளது என்றும் ஆஸ்திரேலிய ஊடகம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

# 'என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா' கண்காட்சியைக் காண இந்தியத் தூதுவர் விஜயம்!

மொனராகலை, செப்.01

மொனராகலையில் நடை பெறும் 'என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா' தேசிய கண் காட்சியை பார்வையிட இந் திய தூதுவர்தரண்ஜித் சிங் சந்து நேற்று முன்தினம் விஜ யம் செய்திருந்தார்.

மொனராகலை மாவட்ட செயலகப் பிரிவில் கடந்த புதன்கிழமை ஆரம்பமான இந்தக் கண்காட்சி மூன்று நாள் களை கொண்டதாகும். நேற் றுடன் இந்த கண்காட்சி நிறைவு பெற்றமை குறிப்பிடத்தக் கது.



இந்தியத் தூதுவரின் இந்த விஜயத்தின்போது பொது நிர்வாக முகமைத்துவம் மற்றும் சட்டமும் ஒழுங்கு அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டாரவும் கலந்துகொண்டார்.

# மொனராகலையில் இந்திய நிதியுதவியில் 150 வீடுகளுக்கு அடிக்கல் நடுகை



மொனராகலை குமார வத்தை தோட்டத்தில் அமைக் கப்படவுள்ள 150 வீடுகளுக் கான அடிக்கல் நடும் வைபவம் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

மலைநாட்டு புதிய கிராமங் கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச் சினால் இந்திய அரசின் நிதி உதவியில் இந்த வீட்டுத்திட்டம் அமைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் பொது நிர்வாக மற்றும் சட்டம் ஒழுங் குகள் அமைச்சர் ரஞ்சித் மத் தும பண்டார, மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்ட மைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச் சர் பழனி திகாம்பரம், கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.இரா தாகிருஷ்ணன், இந்தியத் தூதுவர் தரஞ்சித்சிங் சந்து உள்ளிட்ட பலர் கலந்து கொண் டனர்.

# இரத்தினபுரியின் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 25 வீடுகள் கையளிப்பு!



இரத்தினபுரி, செப்.01

இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 'செனெஹே சியபதா' வீடமைப்புத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப் பட்ட 25 வீடுகள் பாதுகாப்பு இராஜாங்க அமைச் சர் ருவன் விஜேவர்த்தன தலைமையில் பய னாளிகளிடம் அண்மையில் கையளிக்கப்பட் டன.

பாதுகாப்பு அமைச்சின் வழிகாட்டலின் கீழ் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் ஒத்து ழைப்புடன் முன்னெடுக்கப்பட்ட இந்தத் திட்டத் தின் ஊடாக இருபத்தைந்து வீடுகள் எஹெலி யகொட மின்னான பகுதியில் அமைக்கப்பட் டுள்ளது. இவ்வீட்டுத் திட்டத்திற்கான நிதி உதவி டயலொக் எக்சிஎடா நிறுவனம் வழங்கியுள்ள துடன், வீட்டு நிர்மாணப்பணிகளை கடற்படை மற்றும் விமானப்படை வீரர்கள் மேற்கொண் டுள்ளனர்.

இந்த நிகழ்வில் பாதுகாப்பு இராஜாங்க அமைச் சர் ருவன் விஜேவர்த்தனவுடன் இணைந்து நீர்ப்பாசன மற்றும் நீர்வள அனர்த்த முகாமைத் துவ அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவும் இப் புதிய வீட்டுத்திட்டத்தை வைபவ ரீதியாக திறந்து வைத்தார். இவ்வீடுகள் மின்சாரம் மற்றும் நீர் விநியோகம் உட்பட சகல வசதிகளையும் கொண்டு தரநிலைகளுக்கு ஏற்ப நிர்மாணிக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில், மகாசங்க உறுப்பினர்கள், அரச உயர் அதிகாரிகள், டயலொக் எக்சிஎடா பிரதிநிதிகள், முப்படை அதிகாரிகள், பயனாளிகள் குடும்ப உறுப்பினர்கள் உட்படபலர் கலந்து கொண்டனர்.

# தந்தையும் மகளும் சடலங்களாக மீட்பு!

மகியங்கனை, தம்பகொல்ல பிரதேசத்திலுள்ள வீடொன்றிலி ருந்து மர்மமான முறையில் உயிரி ழந்திருந்த நிலையில் சேர்ந்த தந்தையும் மகளும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

மகியங்கனை பொலிஸாருக்கு நேற்று முன்தினம் இரவு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படை யில் தந்தையினதும் மகளினதும் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

31 வயதுடைய தந்தையும் 11 வயதுடைய மகளுமே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, குடும்பப் பிரச் சினை காரணமாக விஷம் அருந்தி தற்கொலை செய்து கொண் டிருக்கலாம் என சந்தேகிக்கும் பொலிஸார் மேலதிக விசாரணை களை முன்னெடுத்து வருகின் றனர்.

காலைக்கதிர் Kalaikkathir



# அமரர் வி.தர்மலிங்கத்தின் நினைவு தினம் ஞாயிறன்று

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கத்தின் 33ஆவது ஆண்டுநினைவஞ்சலி நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு யாழ்ப்பாணம், தாவடியில் அன்னாரின் நினைவுத் தூபி அமைந்துள்ள இடத்தில் இடம்பெறும்.

நவாலியூர் க.கௌரிகாந்தன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் ப.புஷ்பரட்ணம், தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுகன் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்துவர்.

அமரர் வி.தர்மலிங்கத்தின் மகனானநாடாளுமன்றஉறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் நன்றியுரை நிகழ்த்துவார்.

அன்றைய தினம் நண்பகல் 12 மணியளவில் துர்க்கா தேவி ஆலய மண்டபத்தில் தர்மலிங்கம் நினைவாக அன்னதான நிகழ்வு இடம்பெறும். (உ)

# தினசரி ராசி பலன் (01.09.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் ஆவணித்திங்கள் 16ஆம் நாள் சனிக்கிழமை. ஷஷ்டித்திதி இரவு 9.44 மணி வரை பின்னர் ஸப்தமி. நட்சத்திரம்: பரணி இரவு 9.02 மணி வரை பின்னர் கார்த்திகை. சித்தஅமிர்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - காலை 3.06 மணி முதல் 10.38 மணி வரை.

**சுபநேரம்** - மாலை 3.03 மணி முதல் 4.32 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - ஆவணி மாத தேய்பிறை ஷஷ்டி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு**- பரணி.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** நன்மையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். வீட்டில் விஷேசம் நடக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி, கௌரவப் பதவிகள் கிட்டும்.

**ரிஷபம்** யோசனையான நாள். வருமானம் குறையும். குடும்பத்தில் வீண் பிரச்சினைகள் உண்டாகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் குறையும். நண்பர்கள், உறவினர்களுடன் வீண் பகை உண்டாகும்.

**மிதுனம்** ஆக்கபூர்வமான நாள். வருமானம் வளமாக இருக்கும். வியாபாரத்தில் இருந்த தேக்க நிலை மாறும். உத்தியோகத்தில் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புக்கள் அமையும்.

**கடகம்** சமபலன்கள்காணப்படுகின்றன. வருமானம்தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும். தேக சுகம் பாதிப்புறும். அலைச்சல், வாகனப் பழுது வந்து நீங்கும். மற்றவர்களின் பிரச்சினைகளில் தலையிட வேண்டாம்.

**சிம்மம்** நன்மையான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். உத்தியோகத்தில் இவர்களின் கை ஓங்கும். அதிரடி முன்னேற்றம் காண்பார்கள். சகோதர உறவு வலுவடையும்.

**கன்னி** கவலையான நாள். வருமானம் குறையும். குடும்பத்தில் சிறுசிறு உட்பூசல்கள் காணப்படும். வாகன வழியால் செலவுகள் உண்டாகும். கொடுக்கல், வாங்கலில் பிரச்சினை அதிகரிக்கும்.

**துலாம்** சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் இருப்பினும் செலவுகள் அளவுக்கதிகமாகும். எண்ணிய காரியங்கள் தடை, தாமதங்களுடன் நிறைவேறும். பயணத்தின் போது அவதானம் தேவை.

**விருச்சிகம்** ஆக்கபூர்வமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப உறவு மேம்படும். உத்தியோகத்தர்களுக்கு எதிர்பார்த்த இடமாற்றம் கிடைக்கும். வியாபாரம் முன்னேற்றம் அடையும்.

**தனுசு** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்பத்தில் நெருக்கம் பாசம் அதிகரிக்கும். சகோதரர்கள் உதவி கிட்டும். தொழிலில் நல்ல முன்னேற்றம் உண்டாகும்.

**மகரம்** குழப்பமான நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். மனதில் ஒரு வித கவலை யோசனை தோன்றும். எண்ணிய காரியம் தடைப்படும்.

**கும்பம்** விருத்தியான நாள். பணவரவு தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக இருக்கும். குடும்பத்தில் சந்தோஷம் பெருகும். சுய தொழில் விருத்தியடையும். திருமண காரியம் கைகூடும்.

**மீனம்** சுபீட்சமான நாள். நிதி நிலைமை வளமான இருக்கும். குடும்பத்தில் எல்லையற்ற மகிழ்ச்சி காணப்படும். ஆடை, அணிமணிச்சேர்க்கை உண்டாகும். பெண்கள் விரும்பிய மணவாழ்வு அமையும்.

சந்திராஷ்டம நாள்; **உத்தரம் 2ஆம், 3ஆம், 4ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1ஆம், 2ஆம் பாதங்களில் பிறந்தோர் சுப கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# கந்தபுராண எழுச்சி அறிநெறி விழாவின் இன்றைய நிகழ்வுகள்



இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், கந்தபுராண கலாசாரம் இந்த மண்ணின் அடையாளம் என்ற தொனிப்பொருளில், நல்லூர், கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டுக் கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் கந்தபுராண எழுச்சி அருள்நெறி விழா நிகழ்வுகள் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்திலும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்திலும் சிறப்புற முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சனிக்கிழமை, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில், மாலை 3.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை நாவடி வைரவர் குழுவினரின் பஜனை நிகழ்வும், திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக ஆங்கில மொழித்துறைச் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்க, சங்கானைப் பிரதேச அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் பேராதனைப் பல்கலைகழக விரிவுரையாளர், சைவப் புலவர் ஏ.அனுசாந்தனின் "நங்கைமுடிக்கோர் நறுந்தொடை – தெய்வானை அம்மன் திருமணம்" எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும், திருமுறைநெறிச்செல்வர் மா.ந.பரமேஸ்வரனின் திருப்புகழ்க் கச்சேரி ஆகியவை சிறப்பு நிகழ்வாகவும் இடம்பெறவுள்ளன.

# சின்மயா மிஷனில் ஆன்மீக அருளுரை

யாழ். சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தா அவர்களால் 'முருகப்பெருமானின் பூர்வ அவதாரம்' என்ற தலைப்பில் இன்று சனிக்கிழமை மாலை 7.30 மணி முதல் 8.00 மணி வரை இல 700, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள சின்மய ஞான வேல் ஆச்சிரமத்தில் அருளுரை நடைபெற உள்ளது.

யாழ். சின்மயா மிஷன் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றது.

# நல்லூர் துர்க்காதேவி மண்டபத்தில் இன்று

நல்லூர், ஓக. 31

இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர் உற்சவத்தையொட்டி, தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் துர்க்காதேவி மண்டபத்தில் நடத்தி வரும் தெய்வீக இசையரங்கு, இன்று மாலை 6.45 – 8.15 வரை நடைபெறும்.

இசைக்கச்சேரியில்–

பாட்டு:– அழகேசன் அமிர்தலோஜனன், அழகேசன் அமிர்தசிந்துஜன் வயலின்:– கா.குகபரன், மிருதங்கம் – க.கஜன் கெஞ்சிரா– நா.சிவசுந்தர சர்மா, கடம்– நா.மாதவன், முகர்சிங் – சி.செந்தூரன்.

# விளையாட்டு அரங்கத்துக்கு அடிக்கல் நடுகை







கரைச்சி கணேசபுரம் வட்டாரத்தில் அமைந்துள்ள ஜெயந்தி நகர் கிராமத்தின் விளையாட்டு கழகத்திற்கு நிரந்தரமான விளையாட்டு அரங்கு ஒன்றை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. அவ் விளையாட்டுக் கழக தலைவர் அப்பனின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் பிரதேச சபையின் உறுப்பினர் ப.குமாரசிங்கம், கிராம அலுவலர், பொருளாதார உத்தியோகத்தர் மற்றும் சனசமூக நிலைய உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி சங்க தலைவர், விளையாட்டுக் கழக உறுப்பினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் சி.சிறீதரன் எம்.பி விளையாட்டுத் துறை அமைச்சோடு ஏற்படுத்திக்கொண்ட தொடர்பின் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளலக்கிஸ்டார்விளையாட்டு கழகத்திற்கும் ஜெயந்தி நகர் விளையாட்டுக் கழகத்திற்கும் தலா 10 லட்சம் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த பகுதியில் இருக்கின்ற இந்த விளையாட்டு கழகத்தில் பார்வையாளர் அரங்கை நிர்மாணிப்பதற்காக முதலாம் கட்ட நிதியாக 10 லட்சம் ரூபாய்களை விளையாட்டுத் துறை அமைச்சிடமிருந்து பெற்றுக்கொடுத்திருந்தார் என்பது குறிப்பிடதக்கது.

# வடமராட்சியில் விழிப்புணர்வு கூட்டம்





வடமராட்சி, செப்.01

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தால் (VOGT) பெண் தலைமைத்துவகுடும்பங்களுக்கு சேமிப்பின் முக்கியத்துவம் பற்றியும் நுண்நிதி கடனால் ஏற்படும் பாதிப்புகள் பற்றிய விழிப்புணர்வு கூட்டம் வடமராட்சி நல்லொழுக்க நிறுவன இணைப்பாளர் க.ஆ.குலநாதனின் தலைமையில் கடந்த புதன்கிழமை வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தில் நடைபெற்றது. இவ் நிகழ்ச்சியில் வளவளராக ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளர் சி. சிறிகாந்தன் அவர்கள் கலந்து கொண்டார். (இ

# கலஹா வைத்தியசாலை மீதான தாக்குதலில் 2 கோடி ரூபா உடைமைகள் சேதம்

ஹற்றன், செப். 01

கலஹா வைத்தியசாலையின் வைத்தியர்களுக்கு எதிராக கடந்த திங்கட்கிழமை பிரதேச வாசிகளால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது, வைத்தியசாலை கட்டடத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் காரணமாக சுமார் 2 கோடி ரூபா பெறுமதியான கட்டட உடைமைகள் சேதமடைந்துள்ளன என பொலிஸாரின் மதிப்பீடுகள் மூலம் தெரியவந்துள்ளது.

இதேவேளை, வாகனம் மற்றும் உடைமைகள் தொடர்பான சேத மதிப்பீடுகள் பிரத்தியேகமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாடு கடத்தலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கால்நடை பண்ணையாளர் ஆர்ப்பாட்டம்!





மட்டக்களப்பு, செப். 01

மட்டக்களப்பு, படுவான்கரை பகுதியிலிருந்து சட்ட விரோதமான முறையில் மாடுகள் கடத்தப்படுவதாகத் தெரிவித்து நேற்றுமுன்தினம் பட்டிப்பளை பிரதேசத்தில் கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கால்நடை பண்ணையாளர்களால் பட்டிப்பளை பிரதேச செயலகத்துக்கு முன்பாக இந்த போராட்டம் மேற்கொள் ளப்பட்டது.

மாடுகள் கடத்தப்படுகின்றமையை நிறுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் படுவான்கரை மக்களின் வளங்கள் சுரண்டப்படுகின்றமையைத் தடை செய்ய வேண்டும் என்றும் இதில் கலந்து கொண்டிருந்த போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

யுத்தத்திற்கு பின்னர் படுவான் கரை பகுதியில் இருந்து மாடுகள் கடத்திச்செல்லும் நிலைமை அதிகரித்துள்ளது. இதனால், தாங்கள் பெரும் கஷ்டங்களை எதிர்கொள் கின்றோம் என கால்நடை வளர்ப்பாளர்கள் இதன்போது விசனம் வெளியிட்டனர்.

வேறு பகுதிகளில் இருந்து வாகனங்களில் வருவோர், மேய்ச்சலில் உள்ள தமது மாடுகளைக் கடத்திச் செல்கின்றமை தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற போதிலும், இதுதொடர்பில் பொலிஸார் உரிய நடவடிக்கைகளை எடுப்பதில்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம், மண்முனைப் பாலம் அமைக்கப்பட்டதன் பின்னரே இவ்வாறான மாடு கடத்தல்கள் அதிகரித்துள்ளன. இது தொடர்பில் முழுமையான நடவடிக்கை எடுத்து தமது கால் நடைகளை பாதுகாக்க, உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கால்நடை வளர்ப்பாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

அத்தோடு, இந்த ஆண்டில் இது வரையில் 75 இற்கும் மேற்பட்ட சட்ட விரோத மாடு கடத்தல்கள் தமது பொலிஸ் நிலையத்தால் பிடிக்கப்பட்டுள்ளன என கொக்கட்டிச்சோலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சித்திரைக்கு முன்னர் பிரதமரை எதிர்க்கட்சித் தலைவராக்குவோம்



## டிலான் பெரேரா கொக்கரிப்பு

கொழும்பு, செப். 01

செப்ரெம்பர் 5 ஆம் திகதி மக்கள் புதிய அரசு ஒன்று அமைப்பதை உறுதிப்படுத்துவார்கள். அதன் மூலம் எதிர்வரும் சித்திரை புத்தாண்டுக்கு முன்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நாடாளுமன்றத்தில் அவருக்கு பொருத்தமான எதிர்க்கட்சி தலைவர் ஆசனத்தில் அமர்த்துவோம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மாற்று அணி நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரி வித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மாற்று அணி நேற்றுமுன் தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் .

பிரதமரை பதவி நீக்க வேண்டும் என்பது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 41பேரும் இணைந்து எடுத்த தீர்மானமாகும். அதனால், இந்த எதிர்ப்பு போராட்டத்தில் 16 பேர் அணி கலந்துகொண்டால் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க தீர்மானித்தால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராகவும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டி ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

# இரத்தினபுரியில் டெங்கு பாதித்த 1,656 நோயாளர்



இரத்தினபுரி, செப். 01

இரத்தினபுரி மாவட்டத்தில் மீண்டும் டெங்கு நோய் பரவ ஆரம்பித்துள்ளது என சுகாதார துறையினர் எச்சரிக்கை விடுத் துள்ளனர். இந்த மாவட்டத்தில் இதுவரையில் 1656 நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளமையுடன் இருவர் உயிரிழந்துள்ளனர்.

நிவித்திகலை பிரதேச செயலகப்பிரிவில் 232 பேர் என்ற எண்ணிக்கையில் கூடுதலான டெங்கு நோயாளிகள் இனங் காணப்பட்டுள்ளனர்.

இதுதவிர குருவிட்ட செயலகப் பிரிவில் இருவர் உயிரிழந்துள்ளமையுடன் 159 பேரும், எகலியகொடை பகுதியில் 161 பேரும், எல பாத்த பகுதியில் 159 பேரும், இரத்தினபுரி நகரப் பகுதியில் 124 பேரும், இரத்தினபுரி பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் 139 பேரும் இனங்காணப்பட்டுள்ளனர்.

நாடு முழுவதிலும் அரச பாடசாலைகளின் இரண்டாம் தவணை விடுமுறை முடிவடைந்து மூன்றாம் தவணை ஆரம்பமாகவுள்ள நிலையில் மீண்டும் டெங்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# ரூ.120 கோடி பெறுமதிமிக்க

## 20 கிலோ தங்கத்துடன் இந்தியர் கைது!

கொழும்பு, செப். 01

20 கிலோகிரோம் தங்கத்துடன் இந்தியாவின் சென்னையைச் சேர்ந்த பிரஜை ஒருவரை கட்டுநாயக்க பண்டார நாயக்க சர்வதேச விமான நிலை யத்தில் வைத்து குற்றப்புலனாய்வுப்பிரிவினர் கைது செய்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

இந்த நபர் 20 கிலோகிரோம் நிறையுடைய தங்கத்தை தனது ஆடையில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்து கொண்டு வர முயற்சித்த போதே கைதுசெய்யப் பட்டுள்ளார்.

அத்துடன், இவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட தங்கங்களின் பெறுமதி சுமார் 120 கோடி ரூபாவாகும் என தெரிவித்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இவரிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# காணாமற்போன பிள்ளையார் சிலை ஆலயத்தின் கிணற்றிலிருந்து மீட்பு

மட்டக்களப்பு, செப். 01

அக்கரைப்பற்று ஸ்ரீ மருதடி மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் சில மாதங்களுக்கு முன்னர் காணாமற் போன பழம்பெரும் பிள்ளையாரின் சிலை கண்டுபிடிக்கப்பட்டது என அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த ஆலய தீர்த்தக் கிணற்றிலிருந்தே சிலை மீட்கப்பட்டுள்ளது என பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

ஆலயத்தில் இருந்த இந்தச் சிலை சில மாதங்களுக்கு முன்னர் காணாமல் போனது என ஆலய நிருவாகத்தால் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே சந்தேகத்தின் பேரில் கடந்த புதன் கிழமை மாலை பொலிஸார் ஆலய தீர்த்த கிணற்றை இறைத்து சோதனை



செய்த நிலையில் இந்தச் சிலை மீட்கப்பட்டது.

இதேவேளை, சிலை காணாமற் போனது தொடர்பில் பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ள நிலையில், விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

# யானை தாக்கி இளைஞர் பலி!

மட்டக்களப்பு, செப். 01

மட்டக்களப்பு வெல்லாவெளி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மாலையர் கட்டு, கிராமத்தைச் சேர்ந்த 18 வயதுடைய சிவலிங்கம் ஜனார்த்தனன் என்ற இளைஞர் உயிர் இழந்துள்ளார்.

நேற்றுக் காலை அவரது வீட்டுக்கு அருகில் வைத்தே யானை தாக்குதலுக்கு இலக்காகி பலியாகினார் இளைஞர்.

அவரின் சடலம் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், பொலிஸர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir





# பொதுச்சேவைகள் மக்களை சென்றடைகின்றமையில் தடங்கல்கள், இழுபறிகள்

## முல்லைத்தீவு மாவட்டம் வறுமையில் 12.7 வீதம் முழு இலங்கையில் இது இரண்டாம் இடம்

மனித வாழ்வியல் கட்டமைப்பில் தேவைகளில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளில் பொதுச் சேவைகளின் தேவைப்பாடுகளில் பெரும் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன.

வறிய மக்களுக்கு பொதுச்சேவைகளின் தேவைகள் அதிகமாக இருக்கின்றன. பொதுச்சேவைகள் எனும்போது ஒரு நாட்டை நிர்வகிக்கின்ற தரப்பினால் அந்நாட்டு பிரஜைகளுக்கு பொதுவாக வழங்கப்படும் சேவைகளாகும்.

பொதுச்சேவைகளின் முக்கியத்துவத்தை எத்தனை பேர் உணர்ந்திருக்கின்றார்கள் என்பது ஒருபுறமிருக்க, பொது மக்களுக்கு இலசமாக வழங்கப்படுகின்ற பொதுச் சேவைகள் எந்தளவுக்கு நேர்த்தியாக மக்களைச் சென்றடைகின்றன என்ற கேள்விகளும் உள்ளன. இலங்கையைப் பொறுத்த வரை கிராம மட்டங்களிலான பொதுச் சேவைகளுக்குப் பொறுப்பாக உள்ளூராட்சி மன்றங்களே காணப்படுகின்றன. உள்ளூராட்சி மன்றங்களை நிர்வகிக்கும் தரப்பினல் இந்தப் பொதுச் சேவைகளை இலவசமாகத்தான் வழங்குகின்றார்களா என்பது ஆராயப்பட வேண்டியுள்ளது.

மறுபக்கத்தில் அரசியல் ஆயுதங்களாக பொதுச்சேவைகள் கையாளப்படும் நிலையில், தமக்குக் கிடைக்க வேண்டிய பொதுச்சேவைகள் பற்றி மக்கள் எந்தளவுக்கு அறிந்து வைத்துள்ளனர் என்பதை அறிவதற்கு முற்பட்ட வேளையில், பொதுச் சேவைகளின் தரத்தை அறிவதற்கு பல்வேறு அளவீடுகளும் காணப்படுகின்றன என்பதும் –

இந்த அளவீடுகள் மூலம் உரிய நேரத்தில், உரிய முறையில், உரிய தரத்தில் பொதுச்சேவைகள் வழங்கப்படுகின்றனவா என்பதை அறிந்து கொள்ள முடியும் என்பதும் தெரியவந்தது.



இந்த அளவீடுகளில் ஒன்றாக குடிமக்கள் மதிப்பீட்டு அட்டை அல்லது குடிமக்கள் அறிக்கை அட்டை காணப்படுகிறது. பொதுச்சேவைகளின் பயனாளிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும் பின்னூட்டங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த அறிக்கை தயாரிக்கப்படுகிறது. இது சமூகப் பொறுப்புடைமை சார்ந்த எளிமையான மற்றும் வினைத்திறனான ஆய்வுக் கருவியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பொதுச்சேவைகளால் பயனடையும் தரப்பினரினால் வழங்கப்படும் தகவல்களைக் கொண்டு நெறிமுறையாக தயாரிக்கப்படும் இந்த ஆய்வறிக்கை சேவை வழங்குநர்களுக்கு வழங்கப்படும்.


இந்த ஆய்வுமுறையைப் பயன்படுத்தி இலங்கை வறுமை ஆராய்ச்சி நிலையம் (Centre for Poverty Analysis - CEPA) முல்லைத்தீவு, மட்டக்களப்பு மற்றும் மொனராகலை ஆகிய மூன்று மாவட்டங்களில் பொதுச் சேவைகள் பற்றிய ஆய்வொன்றை நடத்தியிருந்தது. குறிப்பாக மட்டக்களப்பு மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் ஆய்வுக்கு உட்பட்ட பகுதிகளில் காணப்படும் பொதுச் சேவைகளின் தரம் மற்றும் மேம்படுத்தப்பட வேண்டிய விடயங்களை கண்டறிய முடிந்தது.

மக்களினால் பெற்றுக் கொள்ளப்படுகிற பொதுச் சேவைகள் மற்றும் அவற்றின் தரம் தொடர்பான திருப்தித் தன்மை, பொதுச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் இந்த ஆய்வில் ஆராயப்பட்டன. ஆய்வின்போது மக்கள் வழங்கிய பதில்கள் மூலம் பொதுச் சேவைகள் குறித்த அவலங்களை அறிந்து கொள்ள முடிந்தது.

குடிமக்கள் அறிக்கை அட்டையைக் கொண்டு நடத்திய ஆய்வில் அறிந்து கொள்ள வேண்டிய பல விடயங்கள் உள்ளன. குடிதண்ணீர், வீதிக் கட்டமைப்பு, வீதிவிளக்குகள், வடிகாலமைப்பு, கழிவகற்றல், விளையாட்டுமைதானம், நூலகம், சிறுவர் பூங்கா போன்ற பொதுச் சேவைகள் பிரதேச சபைகளினால் வழங்கப்பட வேண்டியவை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள இருபது கிராம அலுவலர் பிரிவுகளிலே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதில் ஏறாவூர் பிரதேச செயலகப் பிரிவில் ஐயங்கேணி, மீராக்கேணி, மிச்நகர் ஆகிய மூன்று கிராம அலுவலர் பிரிவுகளும் கோரளைப்பற்று தெற்கு பிரதேச செயலகப் பிரிவில் கிரான் கிழக்கு, கோரகல்லிமடு, தேவபுரம், திகிலிவெட்டை, வாகனேரி போன்ற ஐந்து கிராம அலுவலர் பிரிவுகளும் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் அரசடித்தீவு வடக்கு, கடுக்காமுனை, கொக்கட்டிச்சோலை, மகிழடித்தீவு தெற்கு, முனைக்காடு வடக்கு, முனைக்காடு மேற்கு என்கிற ஆறு கிராம அலுவலர் பிரிவுகளும் போரதீவுப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் கணேசபுரம், கோவில்போரதீவு மேற்கு, மாவேற்குடா, செல்வபுரம், சின்னவத்தை மற்றும் வன்னிநகர் என்கிற ஆறு கிராம அலுவலர் பிரிவுகளும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

அதேபோல முல்லைத்தீவில் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் வற்றாப்பளை, கள்ளப்பாடு தெற்கு, செல்வபுரம், மாமுனை, கேப்பாபிலவு, முள்ளிவாய்க்கால் கிழக்கு, முள்ளிவாய்க்கால் மேற்கு, சிலாவத்தை, முள்ளியவளை வடக்கு, முல்லைதீவு தெற்கு போன்ற கிராம அலுவலர் பிரிவுகளிலும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் முத்தையன்கட்டுக்குளம், கற்சிலைமடு, ஒட்டுசுட்டான், வித்தியாபுரம், மாங்குளம், திருமுறிகண்டி, இந்துபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலும், வெலிஓயா பிரதேச செயலக பிரிவில் நிக்கவெவ தெற்கு, ஜனகபுரம், கிரிபன்வெவ ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலும் மொத்தமாக இருபது கிராம அலுவலர் பிரிவுகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.





### குடிதண்ணீர் பிரச்சினை

இந்த ஒவ்வொரு பிரிவுகளிலும் நடத்தப்பட்ட ஆய்வின்போது சில பொதுச் சேவைகளை மக்களால் சிரமமின்றி பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்ற போதும், பெற்றுக் கொள்ளப்படுகிற சேவை களைப் பற்றிய திருப்தியின் அடிப்படையில் அவற்றின் தரத்தை எம்மால் அறிந்து கொள்ள முடிந்தது.

குடிதண்ணீர் என்கிற பொதுத் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டிய தேவை பிரதேச சபைகளுக்குரியது. ஆய்வின் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் குடிதண்ணீர் தேவை நிறைவேற்றப்பட்டுள்ளது. இருந்த போதும், வழங்கப்படும் குடிதண்ணீரின் தரம் தொடர்பில் மக்கள் மத்தியில் திருப்தியைக் காண முடியவில்லை. குறிப்பாக வன்னிநகர், மவேற்குடா, கோவில்போரதீவு மேற்கு, தேவபுரம், முனைக்காடு வடக்கு, மகிழடித்தீவு, கொக்கட்டிச்சோலை, அரசடித்தீவு போன்ற கிராம அலுவலர் பிரிவுகளுக்கு வழங்கப்படும் குடிதண்ணீரை பற்றி மக்களுக்கு இருக்கும் திருப்தியானது மிக மிகக் குறைவு என்றே கூறமுடியும். குடிதண்ணீருக்கான தேவை இருப்பதாக சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவித்தும் இதுவரை அத்தேவை நிவர்த்தி செய்யப்படவில்லையென 30 சதவீதமான மக்கள் குறிப்பிடுகின்றனர்.

முல்லைத்தீவில் ஜனகபுரம், நிக்கவெவ தெற்கு, வற்றாப்பளை, செல்வபுரம், முள்ளியவளை வடக்கு, முல்லைத்தீவு தெற்கு, மாமுலை, ஒட்டுசுட்டான் போன்ற பகுதிகளில் குடிதண்ணீர் வசதி மிகவும் குறைவாகவே உள்ளது.

### வீதிக் கட்டமைப்பு மிகவும் மோசம்

வீதிக்கட்டமைப்பைப் பொறுத்தவரையில் பல பிரதேசங்களிலுள்ள பாதைகள் புழுதி கிளப்பும் கிரவல் பாதைகளாகவே காணப்படுகின்றன. வடமாகாணத்தில் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் கிழக்கிலும் இந்த கிரவல் வீதிகளை அதிகமாகப் பார்க்கக் கூடியதாகவிருந்தன.

முத்தையன்கட்டுக்குளம், முள்ளியவளை வடக்கு, திருமுறிகண்டி ஆகிய பிரதேசங்களிலும் வீதிகளின் தரம் குறைவாகவே உள்ளது. மட்டக்களப்பில் மவேற்குடா, கணேசபுரம், வன்னிநகர், வாகனேரி, செல்வபுரம், கிரான் கிழக்கு, கோரகல்லிமடு, அரசடித்தீவு வடக்கு, திகிலிவெட்டை, முனைக்காடு மேற்கு, தேவபுரம், முனைக்காடு வடக்கு மற்றும் கொக்கட்டிச்சோலை போன்ற பகுதிகளில் தேவைக்கு ஏற்ற வகையில் வீதிக் கட்டமைப்பு காணப்படவில்லை.

மழை காலங்களில் இந்த வீதிகளைப் பயன்படுத்த முடியாதுள்ளது.

2016ஆம் ஆண்டில் குடும்ப வருமானம் மற்றும் செலவு கணக்கெடுப்புக்கு அமைய இலங்கையில் பொதுவாக வறுமை 4.1% ஆகவும், நகரப்புறத்தில் வறுமை 1.9% ஆகவும், கிராமப்புறங்களில் 4.3% ஆகவும் உள்ளன. வடமாகாணத்தில் மொத்தமாக வறுமையின் அளவு 7.7% ஆகவும் கிழக்கில் 7.3% ஆகவும் உள்ளது. நாங்கள் ஆய்வை மேற்கொண்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் வறுமையின் அளவு 12.7% ஆகவும் மட்டக்களப்பில் 11.3% ஆகவும் உள்ளது.

மற்றைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் இரண்டாவது இடத்தில் முல்லைத்தீவும், மூற்றாவது இடத்தில் மட்டக்களப்பும் உள்ளன.

**அனுஷா சிவலிங்கம்**
**வறுமை ஆராய்ச்சி நிலையம்** (CEPA)




## கடந்த மூன்றரை வருடங்களில்

# இலங்கையில் ஜனநாயகத்தை பலப்படுத்தி இருக்கிறோம்

நேபாளத்தின் தலைநகர் காத்மண்டுவில் நான்காவது பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆற்றிய உரை.

பிம்ஸ்டெக் மாநாட்டை எமது சகோதர நாடாகிய நேபாளத்தின் தலைநகராகிய காத்மண்டுவில் வெற்றிகரமாக நடத்தியமையை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன். இந்த முக்கிய மாநாட்டிற்கு எமக்கு அழைப்பு விடுத்தமைக்காக பிம்ஸ்டெக் ஏற்பாட்டுக் குழுவின் பிரதான நிறைவேற்றுக் குழுவிற்கும் நேபாளத்தின் பிரதமர் உள்ளிட்ட நேபாள அரசுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

2016ஆம் ஆண்டு இந்தியாவின் கோவாவில் பிம்ஸ்டெக் மாநாட்டின் அமர்வொன்று இடம்பெற்றது. அதன் பின்னர் பிம்ஸ்டெக் உறுப்பு நாடு என்ற ரீதியில் இம்மாநாட்டில் மகிழ்ச்சியுடன் கலந்துகொள்கிறோம். இன்றைய கால கட்டத்தில் அனைத்து அரசாங்கங்களும் நாடளாவிய ரீதியிலும் வலய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் ஒன்றோடொன்று தொடர்புடையதாகவே விளங்குகின்றது. பிம்ஸ்டெக் உறுப்பு நாடுகள் அனைத்தும் இந்து சமுத்திரத்தை அண்மித்துள்ள நட்பு நாடுகளாகவும் வங்காள விரிகுடா பிராந்தியத்தில் ஒரே கலாசாரம், ஒரே விதமான பொருளாதார வழிமுறைகள் மற்றும் பல்வேறு ஒற்றுமைகளுடன் கூடிய வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட நாடுகளாக நீண்டகாலமாக இருந்துவருகின்றன.

எமக்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ள பொருளாதார, அரசியல், சமூக ரீதியான பிரச்சினைகள் ஒன்றுக்கொன்று சமமாகவே காணப்படுகின்றன. பல உலக நாடுகள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு எமது பிம்ஸ்டெக் உறுப்பு நாடுகளும் முகங்கொடுக்க நேர்ந்துள்ளது. அப்பிரச்சினைகளிடையே காலநிலை மாற்றங்களால் பொருளாதார திட்டங்கள் சாவல்களை எதிர்நோக்குகின்றன. இன்று உலகில் காலநிலை மாற்றத்துடன் முகங்கொடுத்துள்ள முக்கிய பிரச்சினை வறுமையாகும். வறுமை அதிகரிப்பிற்கு இது முக்கிய காரணமாக உள்ளது.



**மிகப்பெரும் சவாலாக போதைப் பொருள் பிரச்சினை**

அதேபோன்று போதைப்பொருள் பிரச்சினை முழு மனித சமூகத்திற்கும் மிகப் பெரும் சவாலாக மாறியுள்ளது. இன்று உலகின் அனைத்து நாடுகளிலும் உள்ள பாடசாலை மாணவர்கள் முதல் அனைவரும் முகங்கொடுத்திருக்கும் பெரிய பிரச்சினையாக இது உள்ளது. போதைப்பொருள் பிள்ளைகளையும் புதிய தலைமுறையினரையும் சீரழித்து வரும் அதேநேரம் அனைத்து நாடுகளினதும் எதிர்காலத்திற்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

கல்வியறிவை பின்னடையச் செய்துள்ளது. சட்ட விரோத போதைப் பொருளைப்போன்று பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சட்ட பூர்வமானது என அடையாளப்படுத்தப்படும் போதைப் பொருள்களும் இந்த நிலைமைக்கு காரணமாக அமைக்கின்றது. உலகில் அரசாங்கங்களை அமைப்பதற்கும் அரசாங்கங்களை வீழ்த்துவதற்கும் அரசயல்வாதிகளை அதிகாரத்தில் இருந்து கீழிறக்குவதற்கும் தமக்கு வேண்டிய அரசியல் வாதிகளை அதிகாரத்திற்கு கொண்டுவரவும் சட்ட விரோத போதைப்பொருள் கடத்தற்காரர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

எனவே பிம்ஸ்டெக் மாநாட்டின் நோக்கங்களில் ஒன்றாகவுள்ள இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் குறிப்பிட்டமையைப் போன்று நீலப் பசுமை பொருளாதாரம் தொடர்பான எதிர்பார்ப்புகளுடன் கூடிய நிகழ்ச்சித் திட்டங்களில் சமூகத்தில் ஊழல், மோசடி, அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தல் போன்ற அனைத்தும் இல்லாமற் செய்யப்பட வேண்டும். நாம் சிலபோது பசுமை பொருளாதாரம் பற்றி பேசுகிறோம். அதே போன்று நாம் நீலப் பசுமைப் பொருளாதாரம் பற்றி பேசுகிறோம். இவையனைத்திலும் நல்லாட்சி எண்ணக் கருவின் அடிப்படையில் ஜனநாயக முறைமையை ஏற்படுத்தி மனித சுதந்திரம், அடிப்படை உரிமைகள், ஊடகச் சுதந்திரம் என்பவற்றை உறுதிப்படுத்தி செயற்படும் அரசியல் முறைமை பற்றி முழு மனித சமூகமும் நம்பிக்கை வைத்துள்ளது.

எமது இலங்கை தேசத்தில் கடந்த மூன்றரை வருட காலப்பகுதியில் நாம் ஜனநாயகத்தை பலப்படுத்தியிருக்கிறோம் என குறிப்பிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். பக்க சார்பின்றி அரசியல் கட்சி வேறுபாடுகள் இன்றி ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற பாகுபாடுகள் இன்றி ஊழலில் ஈடுபடுகின்றவர்களுக்கு எதிராக தீர்மானங்களை மேற்கொள்வதற்கு சட்டத்திற்கு இடமளிக்கப்பட்டுள்ளது.

**பின்னடைவு கண்டிருந்த சட்ட ஆட்சியை பலப்படுத்தியுள்ளோம்**

எமது நாட்டில் பின்னடைவு கண்டிருந்த சட்ட ஆட்சியை பலப்படுத்தி நீதித் துறையின் சுயாதீன தன்மையையும் பக்கசார்பற்ற தன்மையையும் ஏற்படுத்தியிருக்கின்றோம். பிம்ஸ்டெக் மாநாட்டின் மூலம் எதிர்பார்க்கப்படும் தூய்மையான நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு இந்த அனைத்து துறைகளிலும் கவனம் செலுத்த வேண்டும்.

இலவச கல்வி, இலவச சுகாதார சேவையை போன்று பொருளாதாரம், விவசாயம், சுற்றுலாத்துறை, மீன்பிடித் துறை ஆகிய அனைத்து துறைகளும் இன்று முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். எனவே நாம் எமது நாடுகளுக்கு தனித்துவமான ஒவ்வொரு விடயத்துறைகளிலும் செயற்படுத்தப்படும் பொருளாதார, சமூக, கலாசார, அரசியல் நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் பிராந்திய ரீதியாக எமக்கு தனித்துவமான, பொருத்தமான பொது உடன்பாட்டு மற்றும் இணைக்கப்பாட்டிற்கு வரக்கூடிய அனைத்து விடயங்களையும் பொது நோக்கின் அடிப்படையில் செயற்பட வேண்டியது முக்கியமானதாகும்.

பிம்ஸ்டெக் அமைப்பில் பல்வேறு பன்முக அம்சங்களை நோக்காகக் கொண்டு நாம் செயற்பட முடியும். எந்தவொரு துறைக்கும் பிம்ஸ்டெக்கின் நோக்கங்கள் மட்டுப்படுத்தப்பட வேண்டியதில்லை என நான் நம்புகின்றேன். இன்று மனித சமூகம் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகள், ஒவ்வொரு நாட்டையும் பாதிக்கின்ற பிரச்சினைகள், பிராந்திய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் ஏற்படுகின்ற பிரச்சினைகள் பிராந்தியத்தில் ஏற்படுத்தும் தாக்கங்கள் எவை? எமது நட்பு நாடுகளை அவை எவ்வாறு பாதிக்கின்றன? இந்த விடயங்கள் தொடர்பில் தெளிவான புரிந்துணர்வுடனும் தெளிவான நிகழ்ச்சித் திட்டங்களுடனும் நாம் முன்னேறிச் செல்லவேண்டும்.




20 வருட கால அனுபவம் இந்த பிம்ஸ்டெக் மாநாட்டுக்கு உள்ளது. எனவே சகோதரத்துவம், இணக்கப்பாடு, நோக்கம், எதிர்பார்ப்புகள் இவையனைத்தையும் பலமானதொரு அடிப்படையில் மேற்கொள்வதற்கு எமக்கு நம்பிக்கையும் சகோதரத்துவமும் அடிப்படைகளாக இருக்க வேண்டும். எமது சகோதர நாடுகளின் தலைவர்கள் மற்றும் இராஜ தந்திரிகள் இவ்வாறான பல விடயங்கள் குறித்து விரிவான தெளிவையும் அறிவையும் அனுபவத்தையும் முதிர்ச்சியையும் பெற்றிருக்கின்றீர்கள். எனவே இந்த தொழில்நுட்ப உலகில் நாம் நவீன தொழில்நுட்பத்துடன் முன்னோக்கி செல்வதைப்போன்று எமது கலாசார பாரம்பரிய மரபுரிமைகளை பேணி உன்னத நாகரிகத்துடன் முன்னேறிச் செல்வோம்.

எமது தனித்துவமான பாரம்பரிய கலாசார மரபுரிமைகள், பண்பாடுகள் நாம் கட்டியெழுப்பியிருக்கின்ற கடந்த கால அனுபவங்களுடன் மனித சமூகத்தின் முன்னேற்றத்திற்காகவும் எதிர்காலத்திற்காகவும் எதிர்பார்ப்புகளுடன் கூடிய வகையில் முன்னேறிச் செல்கின்ற போது அந்த உறுதியான பயணத்திற்கு பிம்ஸ்டெக் மாநாடு பலமான அடித்தளமாக உள்ளது.

எனவே இன்றைய தினம் இந்த முக்கியமான ஒரு விடயத்திற்காக ஒன்று சேர கிடைத்திருப்பதையிட்டு அனைவருக்கும் நன்றி தெரிவிக்கின்றேன். *

**அது மட்டுமன்றி சட்ட ஆட்சியை நிலைநாட்டி நீதித் துறையையும் வலுப்படுத்தி உள்ளோம்**



காலைக்கதிர் Kalaikkathir



## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்கள் பேரவையின் செயலகத்தை யாழ்ப்பாணம், பலாலிவீதி, கந்தர்மடத்தில் நேற்று மாலை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

### இனி ஆளுநர் ஆட்சி

ஒரு முக்கியமான கால கட்டத்தில் நாம் இங்கு கூடியுள்ளோம். மாகாண சபைத் தேர்தல்கள் வரப் போகின்றன. எமது பதவிக் காலம் முடிந்ததும் ஆளுநர் ஆட்சி நடத்தப்போகின்றார். அவர் ஆட்சியின்போது எமக்குப் பாதிப்பான நடவடிக்கைகள் நடைபெறப் போவதைத் தடுத்து நிறுத்த வேண்டியிருக்கும். முக்கியமாக பௌத்த விகாரைகளைத் திறந்து வைக்க இருப்பது தெரிய வந்துள்ளது.

பலரும் உங்கள் இணைத் தலைவரின் வருங்கால அரசியல் பயணம் பற்றிய கேள்வியை விடுத்த வண்ணமே உள்ளார்கள். இன்று கூட 'காலைக்கதிர்' பத்திரிகை தனது 'இனி' என்ற தலையங்கத்தின் கீழ் தரும் குறுங் கட்டுரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே தமது நடவடிக்கைகளால் முதலமைச்சர் தொடங்கும் கட்சிக்கு ஆதரவு திரட்டித்தந்து விடுவார்கள் என்று கூறியுள்ளது.

### 4 மாற்று வழிகள்

என்னிடம் தற்போது நான்கு மாற்று வழிகள் தரப்பட்டுள்ளன.

★ ஒன்று திரும்பஎன் வீட்டுக்குச் சென்று எனது ஓய்வு வாழ்க்கையைத் தொடர்வது.

★ மற்றையது ஒரு கட்சியுடன் சேர்ந்து தேர்தலில் நிற்பது.

★ மூன்றாவது புதிய கட்சி ஒன்றைத் தொடங்குவது.

★ நான்காவது கட்சி அரசியலை விட்டு எமது தமிழ் மக்கள் பேர வையை ஓர் உண்மையான மக்கள் பேரியக்கமாக மாற்றி உள்நாட்டு, வெளிநாட்டுத் தமிழ் மக்களை ஒன்றிணைத்து அரசுடன் எமக்கேற்ற தீர்வொன்றை முன் வைத்துப் பெற முயற்சிப்பது.

உண்மையில் நான்காவதாகக் கூறப்பட்ட விடயம் கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் தான் என் நண்பர் ஒருவரால் முன் வைக்கப்பட்டது. அவருக்கும் கட்சி அரசியலுக்கும் இடையில் வெகு தூரம். என்னைக் கட்சி அரசியல் வானில் இருந்து வெளியேற்ற அவர் கொண்டு வந்த ஒரு சதிக் கருத்தே இது என்று அதனை என்னால் தட்டிக்கழிக்க முடியவில்லை. ஆனால் நான்காவது மாற்று வழி என்னைச் சிந்திக்க வைத்துள்ளது.

### கட்சி சாரா பேரியக்கங்கள்

கட்சி சாரா பேரியக்கங்கள் பல நாடுகளில் மக்களின் ஒத்துழைப்புடன் பல அரசியல் மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கின்றன. அதைப்பற்றி இன்றைய கூட்டத்தின்போது எனதினிய தமிழ் மக்கள் பேரவை உறுப்பினர்கள் சிந்தித்துக் கருத்துரை வெளியிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். அத்துடன் புதிய கட்சி தொடங்குவது பற்றியும் உங்கள் எல்லோரதும் கருத்தை அறிய ஆவலாய் உள்ளேன். கட்சி தொடங்குவது இலகுவானது. அதை நடத்துவது சிரமமானது. மேலும் கட்சிகளைப் பதிவுசெய்யப் பல காலம் எடுக்கும். தேர்தல்கள் வந்தால் எந்தச் சின்னத்தின் கீழ் போட்டியிடவேண்டும் என்ற கேள்வி எழும்.

எனினும் 2009 இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொண்ட தலைமைப் பாத்திரம் மற்றும் அதன் அணுகுமுறை போன்றவற்றில் அது தோல்வி அடைந்துவிட்டது என்றே கூற வேண்டியுள்ளது. வரலாறு உங்களுக்கு வழங்க முன்வந்துள்ள தலைமைப் பாத்திரத்தை நீங்கள் ஏற்று முன்னெடுக்கத் தயாரா எனத் தமிழ் மக்கள் பேரவையும் மக்களும் நீண்ட காலமாக என்னிடம் கேட்டு வருகின்றார்கள். இதற்குப் பதில் அளிக்க வேண்டிய கடப்பாடு எனக்கு இருப்பதை ஏற்றுக் கொள்கின்றேன்.

### வரலாறு என் மீது சுமத்தியுள்ள பொறுப்பு

60 வருடத்துக்கு மேற்பட்ட தமிழ்த் தேசிய அரசியல் போராட்ட வரலாறு எனக்கு வகுத்து அளித்திருக்கும் பொறுப்பை நான் தெளிவாக உணர்ந்திருக்கின்றேன். இதில் எள்ளளவும் சந்தேகம் வேண்டாம். ஆனால், 2013 ஆம் ஆண்டில் இருந்து ஆரம்பித்த வடக்கு மாகாணசபை தலைமைப் பதவி அதிகாரபூர்வமாக இன்னமும் சில வாரங்களில் முடிவுக்கு வருகிறது. இதை அடுத்து தமிழ்த் தேசிய அரசியலில் தொடர்பில் நான் ஆழமாக ஆராய்ந்து வருகின்றேன். இது தொடர்பில் உங்களுடனும் (பேரவை) அனைத்து தமிழ்த் தேசியக் கொள்கை சார் அமைப்புக்களுடனும் இணைந்து உரிய முடிவை விரைவில் அறிவிக்கவே உங்கள் கருத்தறிய ஆவலாய் உள்ளேன்.

எது, எவ்வாறு இருப்பினும் தமிழ் மக்கள் பேரவை ஒரு கட்சி சாரா, கட்சி அரசியலில் ஈடுபடாத இயக்கமாகவே தொடர்ந்து இயங்கி வருகின்றது. ஆனால் எமது நடவடிக்கைகள் காலத்துக்குக் காலம் முளைக்கும் காளான்கள் போன்று திடீரென்று வந்து மறைவதான இயல்பையே கொண்டிருக்கின்றன. தமிழ் மக்கள் பேரவை பல கோணங்களில் இருந்தும் தமிழ்ப் பேசும் மக்களின் நிலையை ஆராய வேண்டியுள்ளது.

### கட்சி அரசியல் வேறு மக்கள் அரசியல் வேறு

கட்சி அரசியல் என்பது வேறு. மக்கள் அரசியல் என்பது வேறு. தேர்தல்கள், கட்சிகள், அவை சார்ந்த சட்ட திட்டங்கள் என்பன மக்கள் நலனுக்காக நடைமுறைப் படுத்தப்பட்டு வந்தாலும் அவை ஒரு குறுகிய வட்டத்தினுள் இயங்கும் அலகுகள். கட்சிகள் அடுத்த தேர்தலில் யார் வரவேண்டும், யாருடன் கூட்டுச் சேரவேண்டும், யாரை வெட்டவேண்டும், யாரைப் புகழ வேண்டும் என்று தமது கட்சி நலன் சார்ந்தே சிந்திக்கின்றன. மக்கள் நலம் வேறு கட்சி நலம் வேறு. மக்கள் எனும் போது இளைஞர், யுவதிகளையும் அதனுள் சேர்த்தே குறிப்பிடுகின்றேன்.

மக்களைப் பொறுத்தவரையில் நாங்கள் பல விடயங்களைக் கவனத்திற்கு எடுக்க வேண்டியுள்ளது. மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளைப் பொதுவாகப் பார்ப்போமானால் அவை இடத்திற்கு இடம் மாறும் தன்மையுடையன. உதாரணத்திற்கு கிழக்கு மாகாணத் தமிழர்கள் முஸ்லிம் மக்களால் மனவருத்தம் அடைந்துள்ளனர். வடமாகாணத்தில் அவ்வாறான பிரச்சினைகள் இல்லை. எமக்கு அரச குடியேற்றம், நீர்வாகத்தில் அரச கட்டுப்பாடுகள், தொடரும் இராணுவ இடத்தங்கல் போன்றவை கவனத்திற்கு எடுக்க வேண்டியுள்ளன. காணாமற் போனோர் பற்றிய விளக்க நிலை, முன்னைய போராளிகளின் வாழ்வு முன்னேற்றம், கைம் பெண்களின் கவலைகள், மீன் பிடிப்போர் பிரச்சினைகள் என்று பலதையும் ஆராய வேண்டியுள்ளது.

### நமது மக்களின் பிரச்சினைகள்

இளைஞர்கள், யுவதிகளின் வேலையில்லாத் திண்டாட்டம் கூட மக்களின் பிரச்சினை தான். அதற்காக நாம் என்ன செய்ய வேண்டும்? பாரிய ஆலைகளை நிர்மாணித்து அவற்றில் அவர்களை வேலையில் சேர்க்கப் போகின்றோமா அல்லது சுய தொழில்களில் எம் இளைஞர்கள், யுவதிகள் ஈடுபட நாம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமா? ஆலைகளையார் நிர்மாணிக்கப் போகின்றார்கள்? வெளியார் ஆக்கிரமிப்புக்கு அவை இடமளிக்குமா? அண்மையில் வெளிநாட்டு முதலீட்டாளர் ஒருவர் நான் வடக்கை வளம்படுத்த எடுத்த திட்டங்களை அரசு நிராகரித்தது என்று கூறினார்.

அதாவது தெற்கில்தான் அவர் முதலீடு செய்யவேண்டும் என்று கூறிவடக்கில் அவர் செய்யவிருந்த திட்டங்களை அவர்கள் நிராகரித்தார்கள் என்றும் கூறினார். ஆகவே எம்மவரைப் புறந்தள்ளிவிட்டு தெற்கத்தையோரைக் கொண்டு வந்து இங்கு முதலீடு செய்யப் பார்க்கின்றார்கள் போல் தெரிகிறது.

அடுத்து இளைஞர்கள் குற்றச் செயல்களில் ஈடுபடுவதையும் போதைப் பொருள் பாவனை, அவற்றின் விநியோகம் போன்றவற்றில் ஈடுபடுவதையும் எவ்வாறு தடுக்கப் போகின்றோம்? இவர்களை அடையாளம் காண எமக்கிருக்கும் அனுசரணைகள் எவை? பொலிஸ் அதிகாரம் சட்டப்படி எமக்கு ஓரளவு இருந்தும் நடைமுறையில் இல்லாதிருக்கின்றது. அவர்கள் ஊடாக இளைஞர், யுவதிகளை அடையாளப்படுத்துவது எத்துணை நம்பிக்கையுடையன என்பதை அலசி ஆராய வேண்டியிருக்கின்றது.

### அரசை நம்புவதா? நாமே செய்வதா?

எமது பொருளாதார விருத்திக்கு அரசை நம்பி இருப்பதா? அல்லது நாமே எமக்கான திட்டங்களை வகுத்து அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டுமா?

எமது மண்ணில் தேங்கி நிற்கும் இராணுவத்தினர் சம்பந்தமாக என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்?

குடும்பங்கள் சீரழிந்து செல்கின்றன, குடிக்கு ஆளாகிய கணவன்மார், குழந்தைகளைப் பராமரிக்க முடியாத தாய்மார், மனைவியை விட்டுப் பிரிந்து பிறிதொருவருடன் வாழ்க்கை நடத்தும் கணவன்மார்கள், அதேபோல் குழந்தைகளை விட்டுவிட்டு வேற்று நபருடன் குடும்பம் நடத்தும் சில பெண்கள். இவ்வாறு பிரச்சினைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

எமது பிரச்சினைகளை நாம் அடையாளம் கண்டோமானால் தான் நாம் அவற்றிற்குப் பரிகாரம் தேடலாம். ஆகவே இவையாவும் எம்மால் அலசி ஆராயப்பட வேண்டும். இவை சம்பந்தமாக நிபுணர்களின் கருத்துக்கள் பெறப்பட வேண்டும்.

இன்று என்னிடம் கோரப்பட்ட விடயம் அடுத்த மாதக் கடைசியில் இளைஞர் பேரணி ஒன்று கூடவிருக்கின்றது. அது சம்பந்தமான எனது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்பதே.

அத்துடன் ஜெனீவாவில் அடுத்த வருடம் மார்ச் மாதம் நடக்கும் கூட்டம் பற்றியும் ஐக்கிய நாடுகளின் அடுத்த செயல்பாடு பற்றியும் எவ்வாறான ஒரு கருத்தை நாம் முன் வைக்க வேண்டும் என்பது.

### இளைஞர்கள் ஒன்றுகூடல்

இளைஞர்கள் ஒன்றுகூடல் என்பது எமக்கு இன்றியமையாதது. இன்னுமொரு 15, 20 வருடங்களில் எம்மில் எத்தனை பேர் உயிருடன் இருப்பார்களோ தெரியாது. உயிருடன் இருந்தாலும் எம்மால் எந்த அளவுக்கு ஓடியாடிச் செயல்பட முடியும் என்பதும் ஒரு பிரச்சினை.

ஆகவே இளைஞர்கள் ஒன்று படுத்தப்படவேண்டும். அவர்களுக்கு அரசியல் நாட்டம் பிறக்க வேண்டும். அரசியல் ரீதியாக ஒருமித்த சிந்தனை அவர்கள் மத்தியில் வெளிவர நாம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அவற்றை நடைமுறைப் படுத்த முனைய வேண்டும். ஒருமித்த சிந்தனை எனும்போது அரசியல் தீர்வு, அதன் தன்மை, அதைப் பெறும் வழிமுறைகள் பற்றி கலந்தாலோசித்து ஒரு தீர்க்கமான முடிவுக்கு நாம் வர வேண்டும்.

ஆனால் எம்மிடையே இருக்கும் சில குறைபாடுகள் பற்றி நாம் உணர்ந்து வைத்திருக்க வேண்டும். முல்லைத்தீவு, வவுனியா போன்ற இடங்களில் குடியேறக் காணி இருந்தும், வீடு கட்ட வசதிகள் தருவதாக அறிவிக்கப்பட்டும் அங்கு குடியேற எமது இளைஞர், யுவதிகள் முன் வருகின்றார்கள் இல்லை. அரச உத்தியோகங்களை எதிர்பார்க்கின்றார்கள். தொழில் சார் அறிவைப் பெற்ற பின் இளைஞர், யுவதிகள் வெளிநாடுகளுக்குச் சென்று விடுகின்றார்கள்.

இங்கு வேலையாள்கள் தட்டுப்பாடு தொடர்ந்து இருக்கின்றன. அதேபோல் படித்த வைத்திய கலாநிதிகள், தாதியர் சேவையில் ஈடுபட்டோர் போன்ற பலரின் சேவைகள் வடமாகாணத்திற்கு வேண்டியிருக்கின்றது. ஆனால் விண்ணப்பிக்க நம்மவர்கள் இல்லை. வெறும் இலேசான பாடங்களைக் கற்றுவிட்டுப் பட்டம் வாங்கிவிட்டு அரச தொழில்களையே எதிர்பார்க்கின்றார்கள் எமது பட்டதாரி இளைஞர்கள் பலர். நம்மை நாமே ஆளும் திறனை எமது இளைஞர், யுவதிகள் முதலில் பெற வேண்டும். அதற்கு அவர்கள் தொழில் மீதும் இனம் மீதும் கரிசனை பிறக்க வேண்டும். மேலும் பல விடயங்கள் பற்றி அடுத்த இளைஞர் கூட்டத்தில் பேச வேண்டும்.

### ஜெனீவா விவகாரம்

ஜெனீவா சம்பந்தமாக என்ன மாதிரியான ஒரு நடைமுறையைப் பின்பற்றவேண்டும் என்று கேட்கப்பட்டது. இது சம்பந்தமாக எமது வடமாகாணசபை ஒரு தீர்மானத்தை ஏற்றது. அவற்றுள் சிலவற்றை இங்கு தருகின்றேன்.

*இலங்கையால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் தீர்மானங்கள் 30/1 யும் 34/1 யும் இதுவரை அமுல்படுத்த முடியாமையாலும், விரும்பாமையாலும், இலங்கை மேற்குறிப்பிட்ட தீர்மானங்களை 2019 பங்குனி மாதத்திற்கு முன்னர் முழுமையாக அமுல்படுத்த தவறுமாயின்,*

*ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையானது, இலங்கையைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முற்படுத்துவதன் பொருட்டு அல்லது விசேடமாக உருவாக்கப்படும் இலங்கைக்கான சர்வதேச நியாய சபையில் முற்படுத்துவதன் பொருட்டு, இலங்கையை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக்கு முன் கொண்டு வருதல் வேண்டுமென ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையை இச்சபையானது கோருகின்றது.*

*யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் நிலை, காணாமற் போனோர், தமிழ் அரசியற் கைதிகள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்த் தொடரும் கட்டுப்பாடில்லாத தடுத்துவைப்பு, தமிழ்ப் பிரதேசங்களில் பெருமளவிலான பாதுகாப்புப் படைகள் நிலை கொண்டுள்ளமை மற்றும் தமிழ் மக்களின் சொந்தக் காணிகளில் இலங்கைப் பாதுகாப்புப் படைகள் தரித்திருக்கின்றமை ஆகியவற்றைக் கண்காணித்து அறிக்கை தருவது பொருட்டு இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையிடும் பிரதிநிதி ஒருவரை நியமிக்குமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையை இந்தச் சபையானது கோருகின்றது.*

*இலங்கையால் தமிழ் மக்களுக்கு சமத்துவமான அரசியல் தீர்வொன்றை வழங்குவதற்கு முடியாமையாலும் விரும்பாமையாலும், யுத்தத்துக்கான மூல காரணத்தை சமாளிக்கத் தவறியுள்ளமையாலும் அத்துடன் கடந்தகால வன்முறையின் மீளெழுகையைத் தவிர்ப்பதன் பொருட்டு எந்தவொரு அர்த்தமுள்ள முயற்சியையும் முன்னெடுப்பதற்குத் தவறியுள்ளமையாலும், ஓர் நிலையான அரசியல் தீர்வைக் காண்பதை நோக்காகக் கொண்டு தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷையைத் தீர்மானிப்பதன் பொருட்டு இத்தீவின் வடக்கு, கிழக்குப் பிரதேசத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்புடன் கூடிய பொது சனவாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கு உதவுமாறு ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளை இச்சபையானது கோருகின்றது.*

### நாம் என்ன செய்வது?

இவற்றில் இருந்து நாம் எமது தீர்மானங்களைத் தயாரிக்கலாம். சென்ற தடவை எம்மை ஒட்டியே வடமாகாணசபை தமது முன்மொழிவுகளை முன் வைத்தது. இவற்றுள் முக்கியமாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கையை முற்படுத்துவதானால் நாம் போர்க்குற்றங்கள் பற்றியோ வேறு சர்வதேச குற்றங்கள் பற்றியோ இலங்கை அரசாங்கங்களுடன் பேசி ஒரு முடிவுக்கு வர முடியாமல் போய்விட்டது என்பதைக் காட்ட வேண்டும். இலங்கை அரசாங்கங்கள் தமிழர் பற்றிய தீர்வொன்றைத் தரும் மனோநிலையில் இல்லை என்பதை நாம் நிரூபிக்க வேண்டும். 30/1 தீர்மானத்தை இலங்கை அமுல்படுத்த பின்நிற்பதை சுட்டிக்காட்டி இலங்கை நம்பிக்கைக்குப் பாத்திரமான நாடாக ஏற்றுக்கொள்ள முடியாதென்பதை உலகறியச்செய்ய வேண்டும்.

சீனா, ரஷ்யா ஆகியன தமது வீடோ அதிகாரத்தின் கீழ் தடை செய்யக்கூடும் என்று கூறப்படுகிறது. ஆனால் குற்றவியல் நீதிமன்றத்திற்குப் போகாது விட்டால் அரசு நின்ற இடத்திலேயே நிற்கும். இவ்வாறான நடவடிக்கைகள் இலங்கை அரசாங்கத்தின் மீது நெருக்குதல்களை உண்டாக்கும் என்பதை நாம் நினைவு கூர வேண்டும்.

அத்துடன் சர்வதேச போர்க் குற்ற விசாரணை ஒன்றிற்கு நாம் ஆயத்தமாகும் வண்ணம் சகல ஆவணங்களையும், நிரூபிப்புகளையும் ஒன்றிணைத்து இப்பொழுதிருந்தே சேர்க்க வேண்டும்.

இப்போதைக்கு இவ்வாறு கூறி அமர்கின்றேன். மேலதிகக் கருத்துப் பரிமாறல் வேண்டுமென்றால் பின்னர் அது நடைபெறலாம். – என்றார்.

# காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது? உண்மை வெளிக் கொண்டு வரப்பட வேண்டும்

## அரசை எதிர்ப்பது போல் நாடகமாடுகின்றனர் கூட்டமைப்பினர் என்கிறார் டக்ளஸ்

காணாமல் போனோர் தொடர்பானமுறைப்பாடுகள் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நம்பிக்கையை பெறுகின்ற விசாரணைப் பொறிமுறை ஒன்றின் ஊடாக விசாரிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மை வெளிக்கொண்டுவரப்பட வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செய லாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

காணாமற்போனோர்தினம்தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

தற்போது அரசால் அமைக்கப்பட்டுள்ள காணாமல் போனோர் அலுவலகத்தின் செயற்பாடுகள் மீதான நம்பிக்கையை இழந்தவர்களாகவே தமிழ் மக்கள் இருக்கின்றனர். எனவே, அமைக்கப்பட்டுள்ளகாணாமல் போனோர் அலுவலகத்தினரின் செயற்பாடுகள் உறவுகளைத் தொலைத்து நீதிகேட்டுப் போராடிவரும் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ளும் வகையில் வலுவாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகள் 1983 ஆம் ஆண்டுகளிலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும். யுத்தகாலத்திலும், சமாதானப் பேச்சு நடைபெற்றன எனக் கூறப்பட்ட காலப் பகுதியிலும்பலர் காணாமல் போயுள்ளார்கள் அவர்கள் பற்றியமுழுமையான விசாரணைகளும் அவசியமாகும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதைத் தெரிந்து கொள்ளவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய பரிகாரங்கள் காணப்படவேண்டும் என்று வலியுறுத்தி பல வருடங்களாக வீதிகளில் தங்கியிருந்து போராடிவருகின்றார்கள். யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு ஒன்பது வருடங்கள் கடந்துவிட்ட போதும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக நீதி கேட்டுப் போராடும் தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்தால், காணாமல் ஆக்கப்பட்டவர்களை மீட்டுத் தருவோம் என்றும், சிறைகளிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளை மீட்டுத் தருவோம் என்றும், படையினர் வசமுள்ளமக்களுக்குச் சொந்தமான காணி, நிலங்களை முற்று முழுதாக மீட்டுத் தருவோம் என்றும், வடக்கு கிழக்கில் நிலைகொண்டுள்ள படையினரை வெளியேற்றுவோம் என்றும் தன்னாட்சி அதிகாரம் கொண்ட அரசியல் தீர்வைப் பெற்றுத் தருவோம் என்றும் வாக்குறுதி வழங்கிய கூட்டமைப்பினர் இப்போது வாக்களித்த தமிழ் மக்களை மறந்தவர்களாக அரசின் ஆசியுடன் எதிர்க்கட்சியாக இணக்க அரசியல் நடத்திக்கொண்டு இருக்கின்றார்கள்.

இவ்வாறான நிலையில் மண் அபகரிப்பையும், வளங்கள் அபகரிப்பையும் எதிர்த்து மக்கள் நடத்தும் தன்னெழுச்சியான போராட்டங்களில் வலிந்துகலந்து கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மேடைகளில்அரசை எதிர்ப்பது போலவும், அரசுக்கு எதிராக எச்சரிக்கை விடுப்பது போலவும் உரையாற்றுகின்றமையைப் பார்த்தால் வேடிக்கையாக இருக்கின்றது.

தெற்கில் அரசின் ஆசிபெற்ற எதிர்க்கட்சியாக இணக்கஅரசியல்உறவுகொண்டாடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், வடக்கில் அரசை எதிர்ப்பது போல் நாடகமாடி தமிழ் மக்கள் தன்னெழுச்சியாக நடத்தும் உரிமைப் போராட்டங்களை வலுவிழக்கச் செய்கின்றமையை மக்கள் கண்டிக்க வேண்டும்.

இன்றைய அரசியல் சூழலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியாளர்களின் பாதுகாப்புக் கவசமாகவே செயற்படுகின்றது. இந்த நிலையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க கூட்டமைப்பு உளப்பூர்வமாக முயற்சி செய்தால் அதை நிறைவேற்றும் கட்டாயத்தில் ஆட்சியாளர்கள் இருக்கின்றார்கள். அதைச் செய்து எமது மக்கள் எதிர் கொண்டுள்ள பிரதான பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைப் பெற்றுக்கொடுக்காமல் தாமும் மக்களுடன் சேர்ந்து போராடுவதாக நாடகமாடுவதை ஆட்சியாளர்கள் அலட்டிக்கொள்ளப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பிள்ளையானின் வழக்கு விசாரணை செப். 19 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு!

கொழும்பு, செப். 01

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) மீதான வழக்கு எதிர்வரும் செப்டெம்பர் 19 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக கைது செய்யப்பட்டு தொடர்ச்சியாக விளக்கமறியலில் இருந்து வரும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மீதான வழக்கு விசாரணை மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் நேற்று எடுத்துக்கொள்ளப்படவிருந்தது.

இந்த நிலையில், நேற்று மேல் நீதிமன்ற நீதிபதி விடுமுறை காரணமாகவும் அரச சட்டத்தரணி மற்றும் சந்தேகநபர்கள் சார்பாக ஆஜரான சட்டத்தரணிகள் நீதிமன்றில் ஆஜராகாத காரணத்தாலும் வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதன்போதுவழக்குவிசாரணை செப்டெம்பர் மாதம் 19 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கம், 2005 ஆம்ஆண்டுடிசம்பர் மாதம் 25 ஆம் திகதியன்று மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் நத்தார் பிறப்பு நள்ளிரவு ஆராதனையில் கலந்துகொண்டிருந்த போது தேவாலயத்திற்குள்ளேயே வைத்து அடையாளந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யும் நெல்லின் அளவை அதிகரிக்க தீர்மானம்!

### விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, செப். 01

விவசாயி ஒருவரிடமிருந்து நெல் விநியோக சபையால் கொள்வனவு செய்யும் நெல்லின் அளவை அதிகரிக்க அரசு தீர்மானித்துள்ளதாக என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அம்பலாங்கொடை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

நெல் விநியோக சபைக்கு நெல்லை வழங்கும்போது விவசாயிகள் முன்னெடுக்க கூடிய பல வசதிகளை நாம் பெற்றுக் கொடுத்தோம்.

அதில் முதல் திட்டமாக விவசாயிகளுக்கு நெல்லை கொண்டுசெல்வதற்கான பைகளை நாம் பெற்றுக் கொடுத்தோம். அடுத்ததாக விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்களின் பரிந்துரையின்றி நெல்லை விற்பனை செய்வதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொடுத்தோம்.

அதேபோன்று இன்று விவசாயிகளின் நலன் கருதி மற்றுமோர் சலுகையையும் பெற்றுக் கொடுத்துள்ளோம்.

அதற்கிணங்க நெல் விநியோக சபையூடாக விவசாயிகளிடமிருந்து இதுவரை 2 ஆயிரம் கிலோ கிராம் நெல்லே கொள்வனவு செய்யப்பட்டு வந்தது.

இந்த நிலையில், எதிர்வரும் காலங்களில் 2 ஆயிரம் கிலோ கிராமிலிருந்த 3 ஆயிரம் கிலோ கிராம் வரை யான நெல்லை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்ய தீர்மானித்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இம்முறை சிறுபோக நெற்பயிர்ச்செய்கை மூலம் அறுவடை செய்யப்பட்ட நெல் கொள்வனவின் போதே ஒரு விவசாயிடம் இருந்து பெறும் நெல்லின் அளவு 3 ஆயிரம் கிலோ கிராமாக அதிகரிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(கு)

# குளவிக்கொட்டுக்கு இலக்கான பெண் பலி ; 10 பேர் காயம்!

குளவிக்கொட்டுக்கு இலக்கான பெண்ணொருவர் பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் ஊருபொக்க பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

தேயிலை தோட்டத்தில் தேயிலைக் கொழுந்து பறித்துக்கொண்டிருந்தவர்கள்மீதே குளவிகள் தாக்குதல் மேற்கொண்டுள்ளன.

இதில் 11 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இந்த நிலையில் சிகிச்சை பலனின்றி 60 வயதுடைய பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

காயமடைந்தவர்களில் 6 பேர் ஆண்கள் எனவும், 4 பேர் பெண்களெனவும் வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(கு)

# இ.தொ.கா. பொதுச் செயலராக அனுஷியா சிவராஜா நியமனம்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் பதவியிலிருந்து ஆறுமுகன் தொண்டமான் விலகியுள்ளார். இ.தொ.க. பொதுச்செயலாளராக அனுஷியா சிவராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

இ.தொ.க. தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிர்வாக சபை மற்றும் தேசிய சபை ஒன்று கூடலின்போதே இந்த அறிவிப்பு வெளியாகியது.

இ.தொ.க. தலைவராகச் செயற்பட்ட முத்துசிவலிங்கம் அப்பதவியிலிருந்து விலகியமையைத் தொடர்ந்து, பொதுச் செயலாளராகவிருந்த ஆறுமுகன் தொண்டமான் தலைமை பதவியையும் பொறுப்பேற்றார்.

இந்நிலையில், நேற்று முதல் ஆறுமுகன் தொண்டமான் இ.தொ.கா. தலைவராக மாத்திரம் செயற்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இ.தொ.கா. பொதுச் செயலாளராக அனுஷியா சிவராஜாவும், பிரதிப் பொதுச் செயலாளராக ஜீவன் தொண்டமான் மற்றும் உப தலைவராக பதுளை மாவட்ட மாகாண சபை உறுப்பினர் சிவலிங்கம் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(ஐ)

# இரு மாதங்களுக்கு மூடப்படுகிறது யால தேசிய சரணாலயம்!

கொழும்பு, செப். 01

யால தேசிய சரணாலயம் இன்று முதல் எதிர்வரும் இரண்டு மாதங்களுக்கு மூடப்படவுள்ளதாக என வனஜீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சந்தன சூரிய பண்டார தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவுகின்ற வறட்சியான காலநிலை மற்றும் வன விலங்குகளின் பாதுகாப்பை கருத்திற் கொண்டே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த காலத்தில் அப் பகுதியிலுள்ள சுற்று விடுதிகளை புனர் நிர்மாணம் செய்தல் மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பணிகள் முன்னெடுக்கப்படும்.

மேலும் யால தேசிய சரணாலயமானது எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதியிலிருந்து சுற்றுலாப் பயணிகளுக்காக மீண்டும் திறக்கப் படும் எனவும் சந்தன சூரிய பண்டார தெரிவித்தார்.

# எட்டாவது பாதுகாப்பு மாநாட்டின் பிரதம அதிதியாக பிரதமர் ரணில்!

கொழும்பு, செப். 01

2018 ஆம் ஆண்டிற்கான எட்டாவது பாதுகாப்பு மாநாட்டின் ஆரம்ப நிகழ்விற்கு இலங்கை இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனாநாயகவின் அழைப் பையேற்று பிரதம அதிதியாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இம்மாநாடு ஆரம்பமானது. இருதினங்களைக் கொண்ட இந்த மாநாடு நேற்றுடன் நிறைவுபெற்றது.

இந்த நிகழ்வில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன, ஜனாதிபதியின் செயலாளர் உதய செனவிரத்ன, பாதுகாப்பு செயலாளர் கபில வைத்தியரத்ன, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பிரசாத் காரியவசம், பாதுகாப்பு பதவி நிலை பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜய குணரத்ன, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் கபில ஜயம்பதி, பொலிஸ் மாஅதிபர் பூஜித ஜயசுந்தர , ருவாண்டா நாட்டின் பாதுகாப்பு அமைச்சர், ஜெனரல் ஜேம்ஸ் கெப்ரேபே, தூதரக பிரதிநிதிகள், இராஜதந்திரிகள், வெளிநாட்டு தூதர்கள், ஆளுநர்கள், ஓய்வு பெற்ற இராணுவத் தளபதிகள், செயலாளர்கள், மூத்த இராணுவ அதிகாரிகள், ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# தொடரும் தற்கொலை தாக்குதல்; ஈராக்கில் 2 பொலிஸார் சாவு!



பாக்தாத், செப்.01

ஈராக்கில் பொலிஸ் சோதனை சாவடி அருகே நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டு தாக்குதலில் 2 பொலிஸார் கொல்லப்பட்டனர்.

ஈராக் நாட்டில் ஐ.எஸ் பயங்கரவாதிகள் அடிக்கடி தற்கொலைப் படை தாக்குதல் நடத்தி வருகின்றனர். நேற்று முன்தினம் கார் மூலம் நடத்தப்பட்ட தற்கொலைப் படை தாக்குதலில் சோதனைச் சாவடியில் இருந்த 8 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து வரும் நிலையில், பயங்கரவாதிகளுக்கு எதிராக அரசின் பாதுகாப்பு படையினரும் பதில் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று கிர்குக் நகரில் அமைந்துள்ள சோதனைச் சாவடியில், வெடி பொருள்கள் நிரம்பிய காரை தற்கொலைப் படை பயங்கரவாதி ஒருவர் வெடிக்கச் செய்தார். இதன்மூலம் அங்கு பணியில் இருந்த 2 பொலிஸார் கொல்லப்பட்டனர். மேலும், 3 பேர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை எனினும், இதுபோன்ற தாக்குதல்கள் ஐ.எஸ் அமைப்பினரால் தான் அதிகமாக நடத்தப்படுகின்றன என பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# கறுப்பின சிறுவனை கொன்ற வழக்கில் பொலிஸ்காரருக்கு 15 ஆண்டு சிறை!

வொஷிங்டன், செப்.01

அமெரிக்காவில் கறுப்பின சிறுவனைக் கொன்ற வழக்கில் முன்னாள் பொலிஸ்காரருக்கு 15 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலம், டல்லாஸ் அருகே உள்ள ஹிஸ்பேனிக் நகரில் உள்ள ஒரு வீட்டில் சிறுவர்கள் சட்டத்திற்கு புறம்பாக மது விருந்தில் பங்கேற்றுள்ளார் என பொலிஸாருக்கு தககல் கிடைத்தது. கறுப்பின மக்கள் அதிகம் வசிக்கும் அப்பகுதிக்குச் சென்ற பொலிஸார், விருந்து நடந்ததாக கூறப்படும் வீட்டை நெருங்கினர்.

அப்போது சிறுவர்கள் சிலர் ஒரு காரில் புறப்பட்டுச் சென்றுள்ளனர். சந்தேகமடைந்த பொலிஸார் அந்த காரை நிறுத்த முயன்றுள்ளனர். கார் நிற்காமல் சென்றதால், பொலிஸ்காரர் றோய் ஒலிவர், காருக்குள் இருந்தவர்களை நோக்கி சரமாரியாக துப்பாக்கியால் சுட்டுள்ளார். இதில் எர்வர்ட்ஸ் என்ற 15 வயதுச் சிறுவன் உயிரிழந்தார்.

கடந்த ஆண்டு நடந்த இந்த சம்பவம் நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. அமெரிக்க பொலிஸாரின் இனவெறியை இந்த சம்பவம் காட்டுகிறது என பல்வேறு தரப்பினர் குற்றம்சாட்டினர்.

இது தொடர்பாக பொலிஸ்காரர் ஒலிவர் (வயது 38) கைது செய்யப்பட்டு, அவர் மீது கொலை வழக்கு தொடரப்பட்டது. பணியில் இருந்தும் நீக்கப்பட்டார்.



இவ்வழக்கில் வாதப்பிரதிவாதங்கள், சாட்சியங்களிடம் விசாரணை நிறைவடைந்த நிலையில், நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கப்பட்டது. நீதிபதி தனது தீர்ப்பில், ஒலிவர் மீதான கொலைக் குற்றம் நிரூபிக்கப்பட்டதால் அவருக்கு 15 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கிறேன் என அறிவித்தார். இதையடுத்து ஒலிவர் சிறையில் அடைக்கப்பட்டார்.

# ராணுவ ஹெலி விழுந்து நொருங்கி படைவீரர்கள் உட்பட 18 பேர் சாவு!

எத்தியோப்பியாவில் சம்பவம்



அடிஸ் அபாபா:செப்.01

எத்தியோப்பியாவில் ராணுவ ஹெலிகொப்டர் கீழே விழுந்து நொருங்கியதால் அதில் பயணம் செய்த படைவீரர்கள் உட்பட 18 பேர் பலியாகினர்.

எத்தியோப்பியா நாட்டின் கிழக்கு பகுதியில் உள்ள டைர் டிவா நகரில் இருந்து பிஷோவ்ட் நகர் நோக்கி ராணுவ ஹெலிகொப்டர் ஒன்று பறந்து சென்று கொண்டிருந்தது. அதில் 15 படைவீரர்கள் மற்றும் பொதுமக்கள் 3 பேர் என மொத்தம் 18 பேர் பயணம் செய்தனர்.

ஒரோமியா பகுதியில் வந்தபோது, ஹெலிகொப்டர் திடீரென கீழே விழுந்து நொருங்கியது. இந்த விபத்தில் ஹெலிகொப்டரில் பயணம் செய்த 18 பேரும் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியாகினர் என செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.


ஹெலிகொப்டர் விபத்து குறித்து அந்நாட்டு ராணுவம் விசாரணை நடத்தி வருகிறது.

# தென்கொரியாவுடன் போர் பயிற்சி; அவசியம் இல்லை: ட்ரம்ப் அறிவிப்பு

வொஷிங்டன், செப்.01

வட கொரிய தலைவர் கிம் ஜாங் உன்னுடன் தனக்கு நல்லஉறவுஉள்ளது. எனவே, தென் கொரியாவுடன் போர் பயிற்சியை மீண்டும் நடத்துவதற்கு அவசியம் ஏற்படவில்லை என்றும் ட்ரம்ப் டுவிட்டரில் கூறி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மைக் பாம்பியோ, வடகொரியாவுக்கு இந்தவாரம் மேற்கொள்ள இருந்த பயணத்தை ஜனாதிபதி ட்ரம்ப் திடீரென ரத்து செய்தார்.



சிங்கப்பூர் உச்சி மாநாட்டில் அளித்த வாக்குறுதிப்படி, அணுஆயுதங்களைமுழுமையாக கைவிடுவது தொடர்பான வடகொரிய தலைவர் கிம் ஜாங் உன் மேற்கொள்ளும் நடவடிக்கையில் முன்னேற்றம் இல்லை என்பதால்தான், மைக் பாம்பியோ பயணத்தை ட்ரம்ப் ரத்து செய்தார் என தகவல்கள் வெளிவந்தன.

இந்த நிலையில், வட கொரிய தலைவர் கிம் ஜாங் உன்னுடன் தனக்கு நல்ல உறவு உள்ளது என்றும் தென் கொரியாவுடன் போர் பயிற்சியை மீண்டும் நடத்துவதற்கு அவசியம் ஏற்படவில்லை என்றும் ட்ரம்ப் டுவிட்டரில் கூறி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளார். அதே நேரத்தில் வட கொரிய விவகாரத்தில் சீனாவை ட்ரம்ப் சாடி உள்ளார்.

இது பற்றி அவர் டுவிட்டரில் குறிப்பிடுகையில்–

வடகொரியாவுக்கு சீனா மிகுந்த அழுத்தம் அளித்து வருகிறது என்று நம்புகிறேன். மேலும் பீஜிங், வடகொரியாவுக்கு எரிபொருள், உரம், பல சரக்குகள் விநியோகம் செய்தும் வருகிறது என குறிப்பிட்டுள்ளார்.

# நியூ மெக்சிகோவில் பஸ் - லொறி விபத்தில் சிக்கி நால்வர் உயிரிழப்பு

அமெரிக்காவின் நியூ மெக்சிகோ நகரில் பயணிகள் சென்ற பஸ் மீது லொறி மோதிய விபத்தில் 4 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியாகினர்.

அமெரிக்காவின் செயிண்ட் லூயிஸ் நகரில் இருந்து லொஸ் ஏஞ்சல்ஸ் நகரை நோக்கி பயணிகள் பஸ் ஒன்று நேற்று முன்தினம் சென்று கொண்டிருந்தது. அதில் 49 பேர் பயணம் செய்தனர்.

நியூ மெக்சிகோ நகர் அருகில் பஸ் வந்து கொண்டிருந்தது. அப்போது, வீதியின் எதிரே வந்த டிராக்டர் டிரெயிலர் லொறி கட்டுப்பாட்டை இழந்து பஸ் மீது வேகமாக மோதியது.

இந்த விபத்தில் பஸ்ஸின் முன்பகுதி நொருங்கியது. உடல் நசுங்கி 4 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியாகினர். மேலும் 12 பேருக்கு மேல் படுகாயம் அடைந்துள்ளனர்.



தகவலறிந்து மீட்பு படையினர் அங்கு விரைந்து சென்றனர். அவர்கள் காயமடைந்தவர்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளமையால் சாவு எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

ரஷ்யாவிடம் ஆயுதங்கள் கொள்முதல்:

# இந்தியா மீது பொருளாதார தடை விதித்தது பற்றி அமெரிக்கா பதில்!

ரஷ்யாவிடம் இருந்து ஆயுத கொள்முதல் செய்யும் இந்தியா மீது பொருளாதார தடை விதிப்பதில் இருந்து விலக்கு அளிக்கப்படுமா என்பதற்கு அமெரிக்கா விளக்கம் அளித்துள்ளது.

எதிரி நாடுகளின் ஏவுகணை தாக்குதலில் இருந்து நாட்டை பாதுகாத்துக்கொள்ளும் சாதனங்களை ரஷ்யாவிடம் இருந்து கொள்முதல் செய்ய இந்தியா திட்டமிட்டுள்ளது. இந்த சாதனங்களின் மதிப்பு 31 ஆயிரத்து 500 கோடி இந்திய ரூபா ஆகும்.

ஆனால், பல்வேறு விவகாரங்களுக்காக, ரஷ்யா மீது அமெரிக்கா பொருளாதார தடை விதித்துள்ளது. ரஷ்யாவிடம் ஆயுத கொள்முதல் செய்யும் இந்தியா மீதும் அமெரிக்கா பொருளாதார தடை விதிக்கும் என்ற யூகம் எழுந்துள்ளது.

அதே சமயத்தில், நட்பு நாடாக இருப்பதால், பொருளாதார தடை விதிக்கப்படுவதில் இருந்து இந்தியாவுக்கு அமெரிக்கா தானாகவே விலக்கு அளிக்கும் என்றும் கருதப்படுகிறது.

இந்நிலையில், இதுபற்றி அமெரிக்க உதவி ராணுவ அமைச்சர் ரண்டல் ஸ்ச்ரிவரிடம் நேற்று முன்தினம் ஊடகங்கள் கேள்வி எழுப்பின.

இந்தியா – ரஷ்யா இடையிலான வரலாற்று சிறப்புமிக்க உறவை நாங்கள் புரிந்து கொண்டுள்ளோம். ஆனால், எதிர்காலம் குறித்து இந்தியாவுடன் நாங்கள் பேச வேண்டி உள்ளது.

பொருளாதார தடை விதிக்கப்படுவதில் இருந்து இந்தியாவுக்கு விலக்கு அளிக்கலாம் என்று அமெரிக்க ராணுவ அமைச்சர் ஜிம் மட்டிஸ் கூறியுள்ளார்.

ஆனால், எதிர்காலத்தில் செய்யப்படும் கொள்முதல்களுக்காக, இத்தகைய விலக்கு அளிக்கப்படும் என்று என்னால் உறுதி அளிக்க முடியாது.

இதுபற்றி மேல்மட்ட அளவில் ஆலோசித்துதான் முடிவு எடுக்க முடியும் என்று அவர் கூறினார்.

அமெரிக்க ராணுவ அமைச்சர் மட்டிஸ், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மைக் பாம்பியோ ஆகியோர் டில்லியில் இந்திய ராணுவ அமைச்சர் நிர்மலா சீதாராமன், இந்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ் ஆகியோருடன் செப்ரெம்பர் 6 ஆம் திகதி பேச்சை தொடங்குகிறார்கள்.

இந்த நேரத்தில், இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டை அமெரிக்கா எடுத்துள்ளது.

# பங்களாதேஷ் பிரதமருடன் இந்திய பிரதமர் மோடி சந்திப்பு!



காத்மாண்டு, செப்.01

நேபாளத்தில் நடைபெறும் பிம்ஸ்டெக் மாநாட்டில் பங்கேற்ற பிரதமர் மோடி, பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

வங்காள விரிகுடா நாடுகளின் பல்துறைதொழில்நுட்பமற்றும்பொருளாதார ஒத்துழைப்பை இலக்காகக் கொண்ட இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்திய பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் டில்லியில் இருந்து புறப்பட்டுச் சென்றார்.

நேபாளம் சென்றடைந்த மோடிக்கு அரசு முறைப்படி வரவேற்பு மற்றும் அணிவகுப்பு மரியாதை அளிக் கப்பட்டது.

இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக சென்றிருந்த பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசினாவுடன் பிரதமர் மோடி பேச்சு நடத்தினார். இதில் இருநாட்டு உறவுகளின் மேம்பாடு, கலாசாரம் மற்றும் பொருளாதார வளர்ச்சி குறித்து ஆலோசிக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir



# பயங்கரவாதத்தை ஒடுக்க 'பிம்ஸ்டெக்' முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்!

காத்மாண்டு, செப்.01

நேபாளத்தில் நடைபெற்ற மாநாட்டில் பேசிய பிரதமர் மோடி, பயங்கரவாதத்தை ஒடுக்க பிம்ஸ்டெக் நாடுகள் முழு ஒத்துழைப்பை அளிக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

வங்கக் கடலையொட்டி அமைந்துள்ள இந்தியா, பங்களாதேஷ், பூட்டான், மியான்மர், நேபாளம், இலங்கை, தாய்லாந்து ஆகியநாடுகள்பல்வேறுதொழில் நுட்பம், பொருளாதார ஒத்துழைப்புக்காக 'பிம்ஸ்டெக்' என்ற அமைப்பைஉருவாக்கிஉள்ளன. இந்த அமைப்பின் 2 நாள் மாநாடு நேபாள நாட்டின் தலைநகரான காத்மாண்டுவில் நேற்று முன்தினம் தொடங்கியது.

இந்த மாநாட்டில் பங்கேற்க பிரதமர் மோடி நேபாளம் சென்றடைந்தார். அங்கு பிரதமர் மோடிக்கு அரசு முறைப்படி சிறப்பான வரவேற்பு மற்றும் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டன. அதன்பின்னர், மாநாட்டில் கலந்து கொண்ட பிரதமர் நரேந்திர மோடி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்–

நாம் ஒன்றுபட்டு நடைபோட வேண்டும். நாம் அனைவரும் வளர்ந்து வரும் நாடுகள். நாம் சமாதானத்தையும், முன்னேற்றத்தையும் விரும்புகிறோம்.



நேபாளத்தில் பிரதமர் மோடி

ஆனால் அவற்றை இன்றைய உலகில், ஒன்றுபடாமல் எந்த ஒரு நாடும் தனிப்பட்ட முறையில் அடைந்து விட முடியாது.


அண்டை நாடுகளுடனான உறவை இந்தியா எப்போதும் போற்றி பாதுகாக்கும். பிம்ஸ்டெக் நாடுகள் இடையே வர்த்தகம், தொழில் நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்த இந்தியா உறுதி பூண்டுள்ளது.

பயங்கரவாதத்தை ஒடுக்க பிம்ஸ்டெக் நாடுகள் முழு ஒத்துழைப்பை அளிக்க வேண்டும். பிம்ஸ்டெக் நாடுகளை போலவே தெற்காசிய நாடுகளுடனும் இந்தியா நல்லுறவை பேணிக்காக்கும். பிம்ஸ்டெக் நாடுகளின் வளர்ச்சி, சமாதானம், வளம் ஆகியவற்றை உறுதி செய்வதில் இந்தியா உறுதியாக உள்ளது.

பிம்ஸ்டெக் ஸ்டார்ட் அப் உச்சி மாநாட்டை நடத்துவதற்கு இந்தியா தயாராக உள்ளது. 2020 ஆம் ஆண்டு இந்தியா சர்வதேச புத்த மத மாநாடு நடத்த உள்ளது. இந்த மாநாட்டில் வந்து கலந்து கொள்ளுமாறு பிம்ஸ்டெக் அமைப்பின் உறுப்பு நாடுகளை அழைக்கிறேன் என மோடி தெரிவித்தார்.

## கமல்ஹாசன் எந்த தேர்தலிலும் போட்டியிடப் போவதில்லை!

### அமைச்சர் ஜெயக்குமார் கூறுகிறார்



நடிகர் கமல்ஹாசன் எந்த தேர்தலிலும் போட்டியிடப் போவதில்லை என்று அமைச்சர் ஜெயக்குமார் கூறியுள்ளார்.

இது தொடர்பாக சென்னை விமான நிலையத்தில் அமைச்சர் ஜெயக்குமார் நிருபர்களிடம் தெரிவித்தவை வருமாறு–

இரட்டை வேடம் போடுவது தி.மு.க.வின் வழக்கம். நினைவேந்தல் கூட்டத்துக்கு அமித்ஷாவுக்கு அழைப்பு விடுத்தது காங்கிரஸ் கட்சிக்கு எச்சரிக்கை என்றுகூட சொல்லலாம். இதுபற்றி காங்கிரஸ் தான் கவனமாக இருக்க வேண்டும். கூட்டணி மாறுவதற்கு வசதியாக தி.மு.க. திட்டம் வகுத்துக்கொள்ளும் என்பதில் மாறுபட்ட கருத்து கிடையாது.

ஆனால், நாங்கள் எதிர்க்க வேண்டியதை எதிர்ப்போம், ஆதரிக்க வேண்டியதை ஆதரிப்போம். மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்பது தான் அ.தி.மு.கவின் கொள்கை.

அரசியல் என்பது மிகப்பெரிய சமுத்திரம். இதில் யார் வேண்டுமென்றாலும் டம்ளரில் தண்ணீர் எடுத்து குடிக்கலாம். அதில் நடிகர் விஷால் தண்ணீர் எடுத்து குடிப்பதற்கு நாங்கள் ஏன் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும். ஆட்சியாளர்கள் எதுவும் செய்யவில்லை என்று சொல்ல நடிகர் விஷால் அதிகாரம் பெற்றவர் கிடையாது.

தேர்தல் வரும்போது நல்ல திட்டங்களை தந்த எங்களை தான் மக்கள் ஆதரிப்பார்கள். எந்த தேர்தல் வந்தாலும் அ.தி.மு.க. வெற்றி பெறும்.

நடிகர் கமல்ஹாசன் தேர்தலில் போட்டியிடுவோம் என்று சொன்னால் அது விஷயம். போட்டியிடவில்லை என்று சொன்னால் விஷயமே இல்லை. தேர்தல் என்றால் கமல்ஹாசனுக்கு பயம். எந்த தேர்தலிலும் அவர் போட்டியிடப்போவதில்லை.


ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமி இடையே கோஷ்டி மோதல் என்பது கற்பனையான கதை. அவர்கள் கட்சியின் நிர்வாகிகளை சந்திப்பது வழக்கமான ஒன்று. அனைவரும் ஒற்றுமை உணர்வுடன் செயல்படுகின்றனர்.

லண்டன் ஹோட்டல் விவகார வழக்கில் இருந்து விடுவிக்க தி.மு.க. தலைவரிடம் கெஞ்சியது யார்? இதை உணர்ந்து தான் ஜெயலலிதா வீட்டுப் பக்கம் வரக்கூடாது என்று டி.டி.வி.தினகரனை விரட்டி அடித்தார். தி.மு.க.வுடன் உறவு வைத்துக்கொண்டு இருந்தவர் டி.டி.வி.தினகரன்.

இடைத்தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதும் அ.தி.மு.க. பணியை தொடங்கும். மக்களுடன் தொடர்பில்லாதவர்கள் தான் வேலைகளை இப்போதே தொடங்கிவிடுவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்

## இடைத்தேர்தலில் போட்டியிட எங்களுக்கு தயக்கம் இல்லை

### கமல்ஹாசன் திட்டவட்டம்



இடைத்தேர்தலில் போட்டியிடுவதில் எங்களுக்கு தயக்கம் இல்லை என நடிகர் கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவரான நடிகர் கமல்ஹாசன், சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் நிருபர்களிடம் தெரிவித்தவை வருமாறு–

அதிகத்தூர் கிராமத்தை தத்து எடுத்ததில் இருந்து பணிகள் நடைபெற்று வருகின்றன. மழைபெய்து உள்ளதால் தண்ணீர் தொடர்பான பணிகள் செய்ய முடியவில்லை. கழிப்பறைகள் கட்ட நாங்கள் தயாராக இருக்கிறோம். இதற்கான பணிகள் செய்ய அரசாங்கத்திடம் அனுமதி கேட்டுள்ளோம்.

100 கழிப்பிடங்கள் கட்ட எவ்வளவு நாள் தேவைப்படுமோ அதற்குள் கட்டப்படும். அதற்கு மேல் ஆகாது. அரசு அனுமதி தந்து பணிகள் தொடங்கியதும்தான் எப்போது முடிக்கப்படும் என்று கூறமுடியும்.

இடைத்தேர்தலில் போட்டியிடுவதில் எங்களுக்கு தயக்கம் இல்லை. எங்களுக்கு என்ன சரி என்று படுகிறதோ அதை செய்வோம். கட்சியின் கட்டமைப்பு பற்றி நாங்கள் சொல்லவில்லை. ஆரம்ப கட்டத்தில் இருப்பதாக கூறுவது உங்களுடைய யூகம். கட்சியில் நிர்வாகிகள் தேர்தல் நடத்த தற்போது வாய்ப்பு இல்லை. நிர்வாகிகள் நேர்காணல் நடத்தப்பட்டு அறிவிக்கப்படுவார்கள்.

தி.மு.க. தலைவர் கருணாநிதியின் புகழஞ்சலி கூட்டத்தில் பங்கேற்க அழைப்பு வந்தது. ஆனால் நான் வேறு நிகழ்வுகள் இருந்தமையால், இதில் பங் கேற்கவில்லை.

நெடுஞ்சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகளில் தனிப்பாதை அமைப்பது பற்றி சட்டவல்லுநர்களுடன் கேட்டுத் தான் கருத்துச் சொல்ல முடியும்.

இந்தியா முழுவதும் காவிமயம் ஆக்க முயற்சிக்கும் மத்திய பாரதிய ஜனதா அரசுக்கு பாடம் புகுட்டுவோம் என்று கூறுவது மு.க.ஸ்டாலினின் கருத்தாகும். எங்களுடைய கருத்தை நேரம் வரும்போது தெரிவிப்போம். மத்திய அரசு காவிமயத்தை பரப்புகிறதா? என்பதைப்பற்றி நான் பலமுறை பேசியிருக்கிறேன். அதுபற்றி திரும்பத் திரும்ப பேசுகின்றமை சரியாக இருக்காது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பணமதிப்பிழப்பு நடவடிக்கையால் உயர்ந்துள்ளது பொருளாதாரம்!

### மத்திய அமைச்சர் அருண் ஜெட்லி பெருமிதம்

பண மதிப்பிழப்பு நடவடிக்கை மூலம் இந்தியாவின் பொருளாதாரம் உயர்ந்துள்ளது என மத்திய அமைச்சர் அருண் ஜெட்லி தெரிவித்துள்ளார்.

2016 ஆம் ஆண்டு பா.ஜ.க அரசால் அறிவிக்கப்பட்ட பணமதிப்பிழப்பு நடவடிக்கை இன்று வரை சர்ச்சைக்கும், விமர்சனத்துக்கும் உள்ளாகி வருகிறது.

கறுப்பு பணத்தை ஒழிக்கவே இந்த அறிவிப்பு என கூறப்பட்டபோதிலும், தற்போது சுமார் 93 சதவீதம் மதிப்பிழப்பு செய்யப்பட்ட பணம் ரிசர்வ் வங்கிக்கு திரும்ப பெறப்பட்டது என்ற தகவல் மூலம் மீண்டும் சர்ச்சை கிளம்பியுள்ளது.

இதுதொடர்பாக செய்தியாளர்களைச் சந்தித்த காங்கிரஸ் கட்சி தலைவர் ராகுல் காந்தி, பண மதிப்பிழப்பு நடவடிக்கை இந்திய பொருளாதாரத்தின் மீதான தாக்குதல் என விமர்சித்தார்.



இதற்கு பதிலளிக்கும் வகையில் பேசிய மத்திய அமைச்சர் அருண் ஜெட்லி, கறுப்பு பணத்தை தடுப்பது, வருமான வரி தாக்கலை அதிகரிப்பதே பணமதிப்பு நீக்கத்தின் நோக்கமாக இருந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.


மேலும், மத்திய அரசின் பண மதிப்பு நீக்க நடவடிக்கையால் இந்திய பொருளாதாரம் உயர்ந்துள்ளது. வரி தாக்கல் செய்வோரின் எண்ணிக்கை 6.86 கோடியாக உயர்ந்துள்ளதே அதற்கு சாட்சி எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## சமூக ஊடகங்களை சரியாக பயன்படுத்தினால் ஆட்சியில் அமரலாம்: ராமதாஸ் அறிவுரை

சென்னை, செப்.01

சமூக ஊடகங்களை சரியாக பயன்படுத்தினால் பா.ம.க. ஆட்சியில் அமரலாம் என்று பாட்டாளி இளைஞர் சங்கத்தினருக்கு டாக்டர் ராமதாஸ் அறிவுரை வழங்கியுள்ளார்.

பாட்டாளி இளைஞர் சங்கத்தின் மாநில பொதுக்குழு கூட்டம் சென்னை அண்ணாசதுக்கம் அருகே உள்ள அண்ணா அரங்கத்தில் நேற்று முன்தினம் நடந்தது.




கூட்டத்தில் டாக்டர் ராமதாஸ் பேசுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு–

தமிழகத்தில் உள்ள 40 சதவீத இளைஞர்கள் பா.ம.க.வில் இருக்கிறார்கள். அவர்கள் டாக்டர் அன்புமணி ராமதாஸை கோட்டைக்கு அனுப்பும் முயற்சியில் இருக்கிறார்கள். இது காலத்தின் கட்டாயம். அதுமட்டும் அல்ல கட்டளையும் தான்.

இளைஞர்கள் கட்டுப்பாடோடு, கட்சியின் நலன் கருதி மூத்தவர்களையும், நிர்வாகிகளையும் மதித்துச் செயல்பட வேண்டும். மதிக்காமல் செயல்பட்டால் பொறுப்பில் இருந்து விடுவிக்கப்படுவீர்கள்.

3 எழுத்தில் பல்வேறு கட்சிகள் இருக்கின்றன. பா.ம.க.வும் 3 எழுத்து தான். ஆனால் சில 3 எழுத்து கட்சிகள் தமிழகத்தில் வளராமல், வேரூன்றாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது உங்களுடைய கடமை. ஏனென்றால் அந்த 3 எழுத்துகள் ஆபத்தானவை.

சமூக ஊடகங்களை தவறான வழியில் உபயோகிப்பது கட்சிக்கு பெருமை சேர்க்காது. எனவே சமூக ஊடகங்களை கட்சியின் வளர்ச்சிக்காக மட்டுமே பயன்படுத்துங்கள். சரியான திசையில் அதனை பயன்படுத்தினால் நாம் ஆட்சியில் அமரலாம்.

இந்தியாவில் உள்ள கட்சிகளுக்கே பா.ம.க. வழிகாட்டியாக திகழ்கிறது. எனவே வெறுப்பு அரசியலை உமிழ்பவர்கள், அவதூறு அரசியலை வளர்ப்பவர்களிடம் எச்சரிக்கையோடு இருக்கவேண்டும். ரத்தம் தானம் செய்யுங்கள். ரத்த தான முகாம்கள் வேண்டாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

# கோட்டாவின் அழைப்பு

கொழும்பு,செப்.01

கொழும்பில் எதிர்வரும் 5 ஆம் திகதி, அரசுக்கு எதிராக முன்னெடுக்கப்படவுள்ள பேரணியில் பங்குபற்றுமாறு அனைத்துத் தொழிலாளர்கள் மற்றும் புத்தி ஜீவிகளுக்கு பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அச்சுவேலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணியே நேற்று உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

1995ஆம் ஆண்டு இந்தப் பகுதியில் இருந்து மக்கள் இடம் பெயர்ந்திருந்தனர். இதன் பின்னர் இந்தக் காணி இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டிருந்தது.

தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி காணி உரிமையாளர்கள், அச்சுவேலி இராணுவ முகாமுக்கு முன்பாக கடந்த 2014 ஆம் ஆண்டில் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, தாளையடியைச் சேர்ந்த பா.சிவச்செல்வம் (வயது 64) என்பவரே கல்வீச்சுக்கு இலக்காகி காயமடைந்துள்ளார்.

குருணாகலில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்வதற்காக ரயிலில் வயோதிபர் பயணித்தார். மதவாச்சிக்கு அண்மித்த பகுதியில் ரயில் மீது கல் வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டது. அதன்போதே கல்வீச்சுக்கு இலக்காகி அவர் காயமடைந்தார்.

காயமடைந்தவர் அனுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (ஐ)

## பிம்ரெக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேபாளத்தில் நடைபெற்ற நான்காவது பிம்ஸ்ரெக் மாநாட்டின் இறுதிநாளான நேற்று வெள்ளிக்கிழமை அதன் தலைமைப் பதவி ஜனாதிபதி மைத்திரிக்கு வழங்கப்பட்டது.

அதன்படி ஐந்தாவது பிம்ஸ்ரெக் மாநாடு இலங்கையில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

தலைமைப் பதவியை பொறுப்பேற்ற பின்னர் விசேட உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரி, பிம்ஸ்ரெக் அமைப்பின் நான்காவது அரச தலைவர்கள் மாநாட்டை மிகவும் வெற்றிகரமாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்தமை தொடர்பாகவும் நேபாளத்திற்கு வருதைதந்த சந்தர்ப்பம் முதல் வழங்கிய மகத்தான வரவேற்பு மற்றும் உபசரிப்பு தொடர்பிலும் நேபாள அரசுக்குத் தனது நன்றியைத் தெரிவித்தார்.

பிம்ஸ்ரெக் மாநாட்டின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி மைத்திரிக்கு, அனைத்து அரச தலைவர்களும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தமையுடன், அனுபவம் வாய்ந்த அரச தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமைத்துவத்தின் கீழ் பிம்ஸ்ரெக் அமைப்பின் நடவடிக்கைகள் பலமாக முன்கொண்டு செல்லப்படும் என நம்பிக்கை வெளியிட்டனர். (ஐ)

# திருமலையில் ரணில்



திருமலை, செப்01

திருகோணமலை மாவட்டம் சேருவில விகாரைகளுக்கான புதிய இரு கட்டடங்களை நேற்றுப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார்.

சேருவில விகாரை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 1 கோடி 35 லட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பௌத்த மதகுருக்களுக்கான தங்குமிட வசதியைக் கொண்ட கட்டடமும், 2 கோடி ரூபா செலவிலான பிரித் வழிபாட்டு மண்டபமும் இதன்போது திறந்து வைக்கப்பட்டன. சேருவில விகாரைக்கான புதிய வீதி ஒன்றும் திறக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் நவீன் திசநாயக்க, கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீத் பெரேரா, அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நஸீர் உயரதிகாரிகள் எனப் பலரும் பங்கேற்றனர். (ஐ)

## சிங்களவரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியாது.- இவ்வாறு எச்சரித்துள்ளார் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா.

அத்துடன், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு தேவையானதை இலங்கையில் நடைமுறைப்படுத்த இடமளிக்கப் போவதில்லை என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பிரபாகரன் நினைத்தவற்றை இலங்கையில் செயற்படுத்த ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை. வடக்கு முதலமைச்சர் உள்ளிட்டவர்கள் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ளவே தடுமாறுகின்றனர்.

நாட்டைப் பிரிப்பதற்கு இடமளிக்க முடியாது. தமிழர்களுக்கு எம்முடன் இணைந்து செயற்பட முடியும். இலங்கை ஒரு சிங்கள மொழியைப் பேசக்கூடிய ஒரு பௌத்த நாடாகும். அது போன்ற நாட்டில் அனைத்து இன மக்களையும் அரவணைத்துச் செல்லவே எதிர்பார்க்கின்றோம்.

சிறுபான்மை இன மக்கள் சிங்களவர்களை எதிர்த்தால் அவர்கள் அடியோடு ஒழிக்கப்படுவார்கள். சிறுபான்மை இனத்தவர்களுக்கு வேறு ஒரு நாடு தேவையில்லை. எனவே வடக்கு முதல்வர் எம்மை நோக்கி விரல் நீட்டிக் கருத்துக்களைத் தெரிவிக்கமுடியாது.

செல்வநாயகமும், பொன்னம்பலம் போன்றோரும் செய்ய முடியாதவற்றைச் சுமந்திரன் போன்றோர் செய்து முடிக்க முடியாது.

ஆகவே நாட்டில் நிலையான அமைதியை ஏற்படுத்த அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிட நான் தயார்.

அப்படித் தெரிவானால் வடக்கு மற்றும், கிழக்குக்குச் சென்று எம்முடன் கைகோர்க்குமாறு கோருவேன். ஆனால் அவர்களிடம் எந்தக் கோரிக்கைகளையும் முன்வைக்கவேண்டாம் என கூறுவேன்-என்றார். (ஐ)

## நித்தியகலாவின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லத்தில் இறுதி வழிபாடு இடம்பெற்றதை அடுத்து உடல் முறிகண்டி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது.

## நித்தியகலா படு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

முறிகண்டி மற்றும் இந்துபுரம் கிராம மட்டப் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் 10 மணிக்கு முறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்துக்கு முன்னால் ஆரம்பித்த இந்தக் கண்டன ஆர்ப்பாட்டப் பேரணி கோஷங்களை எழுப்பியவாறு ஏ-9 வீதி வழியாக முறிகண்டி பொது நோக்கு மண்டபம் வரை சென்று அங்கு மகஜர் கையளிக் கப்பட்டதுடன் முடிவுற்றது. பின்னர் கண்டன உரை களும் இடம்பெற்றன.

ஆர்ப்பாட்டக்காரர்கள் 'அன்று வித்தியா இன்று நித்தியகலாவா?', 'ஒன்று சேர்வோம் பெண்களை பாதுகாப்பதற்காக', 'இருப்பவர்கள் இருந்திருந்தால் இவ்வாறு நடக்குமா?', 'போராடுவோம் போராடுவோம் நீதிக்காகப் போராடுவோம்', 'காமுகர்களின் பசிக்கு பெண்கள் இரையா?' உள்ளிட்ட பல்வேறு வாச கங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியிருந்தனர்.

இந்த போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா, சிவஞானம் சிறிதரன், வடமாகாணசபை உறுப்பினர்களான து.ரவிகரன், ஆ.புவனேஸ்வரன், த.குருகுலராஜா, சு.பசுபதிப்பிள்ளை மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் செ. பிறேமகாந்த் மற்றும் பிரதேச சபைகளின் உறுப்பினர்கள், முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் மற்றும் சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் ஜனாதிபதிக்கான மகஜரை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜாவிடமும், எதிர்க்கட்சித்தலைவருக்கான மகஜரை நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனிடம், வடமாகாண முதலமைச்சருக்கான மகஜரை மாகாணசபை உறுப்பினர் ரவிகரனிடமும், பொலிஸ்மா அதிபருக்கான மகஜரை மாங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புஸ்பகுமார விடமும் மக்கள் கையளித்தனர். (ஐ-81)

## மருத்துவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனால் பெண் நோயியல் மருத்துவநிபுணரை உடனடியாக நியமிக்குமாறு கோரி கர்ப்பிணிப் பெண்களால் நேற்றுப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இந்தப் போராட்டத்தைக் கர்ப்பிணிப் பெண்கள் முன்னெடுத்தனர்.

இந்தப் போராட்டத்தின் முடிவில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ஞா.குணசீலனுக்கு மனு ஒன்றையும் அவர்கள் கையளித்தனர். (ஐ-81)

## குற்றச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடுப்பதற்கு முறிகண்டிப் பகுதியில் நிரந்தரப் பொலிஸ் நிலையம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

- இவ்வாறு நேற்று ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட மகஜரில் வலியுறுத்தியுள்ளன முல்லைத் தீவுப் பொது அமைப்புகள்.

கழுத்து நெரித்துப் படுகொலைசெய்யப்பட்ட கர்ப்பிணிப் பெண்ணான நித்தியகலாவுக்கு நீதி கோரி முறிகண்டிப் பகுதியில் நேற்றுப் போராட்டம் நடத்தப்பட்டது. அதன் முடிவில் ஜனாதிபதிக்கு மனு ஒன்று கையளிக்கப்பட்டது. அதிலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

கடந்த 28 ஆம் திகதி திருமுறிகண்டியைச் சேர்ந்த கறுப்பையா நித்தியகலா என்பவர் கடத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டு நீர்பாசனக் கால்வாயில் போடப்பட்ட கோரச் சம்பவத்துக்கு வேதனையுடனான கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

போரினால் பாதிக்கப்பட்ட எமது உறவுகள் போரின் வடுக்களில் இருந்து இன்னும் மீளாத நிலையில் தொடர்ந்தும் படுகொலைகளும் ஏனைய குற்றச் செயல்களும் எம்மை மீளவும் கதிகலங்க வைத்துள்ளன.

திருமுறிகண்டி நகரம் நாளாந்தம் பெரும் எண்ணிகையில் பொதுமக்கள் ஒன்றுகூடும் இடமாகும். முறிகண்டி எல்லையில் பல்கலைக்கழகம், ஆடைத்தொழிற்சாலை, பழங்கள் பதனிடும் தொழிற்சாலை என பெருமளவான மக்கள் பயன்படுத்தும் நகரமாக முறிகண்டி நகரம் காணப்படுகின்றது.

எனவே மக்களின் பாதுகாப்புக்காக முறிகண்டியில் நிரந்தர பொலிஸ் நிலையம் அமைக்குமாறு கோரி ஆண்டுகள் பல கடந்தும் பயன் கிடைக்கவில்லை. மாறாகக் குற்றச்செயல்கள் அதிகரித்துக்கொண்டிருக்கின்றன.

பரிதவித்து உயிரிழந்த உறவுகளுக்கு நீதி கிடைக்கவேண்டுமானால் குற்றவாளிகள் இனம் காணப்பட்டுக் காலம் தாழ்த்தாது தண்டனை வழங்கப்படவேண்டும்.

அப்போதுதான் இனிமேலும் இந்த நாட்டில் இதுபோன்ற குற்றசெயல்களைக் கட்டுப்படுத்த முடியும். எமது மக்களின் உரிமை பாதுகாக்கப்படவேண்டும். அதற்கு மதிப்பளிக்கவேண்டும். எனவே அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக- சமாதானமாக வாழக்கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும். இறந்த எம் உறவுக்குச் சரியான நீதி கிடைக்க வேண்டும்-என்றுள்ளது. (ஐ-81)

## ஞான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஞானசாரருக்கு ஆறு வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள நிலையில், தண்டனைக்கு எதிராக மேன் முறையீடு செய்வதற்கு அனுமதி கோரி ஞானசாரர் தரப்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனு நேற்று மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் ஆராயப்பட்டது. இதன்போது அந்த மனு மன்றினால் நிராகரிக்கப்பட்டது. (ஐ)

## திலீபன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நினைவாலயம் அமைந்துள்ள பகுதியைச் சூழ தற்காலிகக் கடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதனால் நினைவாலயத்தின் புனிதத்தன்மை கெடாதவாறு நடந்து கொள்ளுமாறு கோரி மும்மொழிகளிலும் 'புனிதம் காப்போம்' என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்திபனின் பங்களிப்பில் பதாகைகள் கடந்த புதன்கிழமை இரவு கட்டப்பட்டன.

அவற்றை நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிகாலை 1.32 மணியளவில் இரண்டு பொலிஸ் உத்தியோகஸ்தர்களின் பாதுகாப்பில் வந்த சிவில் உடை தரித்த இருவர் அறுத்துக்கொண்டு தங்களது மோட்டார் சைக்கிளில் சென்றனர்.

இந்தச் சம்பவமானது நல்லூர் ஆலயச் சூழலில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரி.வி. கமராக்களில் பதிவாகியுள்ளது. இதனை அடுத்து மீண்டும் அப்பகுதியில் மும்மொழிகளில் புதிதாகப் பதாகைகள் கட்டப்பட்டுள்ளன. (ஐ-7)

## கர்ப்பிணிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவரே சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் விசாரணைக்கு அழைக்கப்பட்ட நிலையில் நேற்று கைதுசெய்யப்பட்டார்.

படுகொலை செய்யப்பட்ட பெண்ணின் கைபேசி இணைப்புத் தொடர்புகளின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்த கிளிநொச்சிப் பொலிஸார், இறுதியாக அழைப்பெடுக்கப்பட்ட கைபேசி இலக்கம் தொடர்பில் விசாரணைகளைமுடுக்கிவிட்டனர்.

அதனை அடிப்படையாக வைத்தே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேகநபர் தனியார் பாதுகாப்புப் பிரிவு ஒன்றில் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றுகின்றார். படுகொலை செய்யப்பட்ட கர்ப்பிணிப் பெண்ணும் பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றியவர். அந்தப் பெண்ணின் கைபேசியில் இருந்து இறுதியாகச் சந்தேக நபருக்கே அழைப்பு எடுக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் அவரை விசாரணைக்கு அழைத்திருந்தோம். விசாரணையின்போது முன்னுக்குப் பின் முரணான தகவல்களை அவர் வழங்கினார். சந்தேகத்தில் அவரைக் கைது செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கின்றோம் என பொலிஸார் மேலும் கூறினர்.

முல்லைத்தீவு முறிகண்டி வசந்தநகரைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயாரான கருப்பையா நித்தியகலா (வயது 32) எனும் குடும்பப் பெண் கழுத்து நெரித்துப் படுகொலை செய்யப்பட்ட நிலையில் கிளிநொச்சி பன்னங்கண்டிப் பகுதியில் உள்ள வாய்க்காலில் இருந்து கடந்த 29 ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்டார். அவர் 5 மாதக் கர்ப்பிணி எனச் சட்ட மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (ஐ-81)

# ஆசிய விளையாட்டு விழா; இலங்கைக்கு ஏமாற்றம்




18 ஆவது ஆசிய விளையாட்டு விழாவில் தனது முதல் போட்டியிலேயே வெற்றியீட்டியது சுதர்சனவின் தலைமையிலான இலங்கை றக்பி அணி.

நேற்று முன்தினம் அரபுஎமிரேட்ஸுக்கு எதிரான போட்டியில் 68:0 என்ற புள்ளிகள் அடிப்படையில் அபாரமான வெற்றியை இலங்கை அணி பதிவு செய்தது.

இந்தப் போட்டியில் முதலாவது பாதி நிறைவடையும்போது இலங்கை அணி 28:0 என முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆரம்பித்தது மேலும் வேகத்தை அதிகரித்து ஆடிய இலங்கை அணி இரண்டாவது பாதியில் நிறைவில் 68:0 என்ற புள்ளிகள் அடிப்படையில் ஐக்கிய அரபு எமிரேட்ஸை வீழ்த்தி வெற்றிபெற்றது.

அதேவேளை நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற தனது இரண்டாவது போட்டியில் இலங்கை அணி கொரிய அணியை எதிர்த்தாடியது.

இந்தப் போட்டியில் பெரும் எதிர்பார்ப்புடன் களமிறங்கிய இலங்கைக்கு ஏமாற்றமே மிஞ்சியது. ஆனாலும் கடும் போட்டிக்கு மத்தியிலேயே கொரிய அணி வெற்றிபெற்றது.

ஆரம்பம் முதலே சளைக்காமல் ஆடிய இரு அணிகளும் வெற்றி வாய்ப்பைத் தம்பக்கம் வைத்துக்கொள்ளவே எத்தனித்தன.

ஆனாலும் முதல் போட்டியில் ஆடிய களைப்பில் களமிறங்கியிருந்த இலங்கை அணி இறுதியில் 31:26 என்ற புள்ளிகளால் தோல்வியைத் தழுவிக் கொண்டது.

**4 மு 400 ஓட்டத்திலும் ஏமாற்றம்**

ஆசிய விளையாட்டு விழாவில் நேற்று முன் தினம் நிறைவடைந்த மெய்வல்லுநர் போட்டிகளில் இறுதியாக நடைபெற்ற ஆண்களுக்கான 4மு400 மீற்றர் ஓட்டப் போட்டியில் இலங்கை அணி பங்கேற்றிருந்தது.

ஆனாலும் அருண தர்ஷன, பசிந்து லக்ஷான், அஜித் மற்றும் கலிங்க குமார ஆகியோரால் இலங்கைக்குப் பதக்கம் ஒன்றை பெற்றுக்கொடுக்க முடியாமல் போய்விட்டது. 8 அணிகளில் இலங்கை அணியோ பந்தயத் தூரத்தை 3.02.74 செக்கன்களில் நிறைவுசெய்து நான்காவது இடத்தைப் பிடித்தது.

இதில் பஹ்ரைன் அணி 3.00.56 செக்கன்களில் ஓடி முடித்து தங்கத்தை வென்றது. வெள்ளிப் பதக்கத்தையும் இந்தியாவும் வெண்கலத்தை ஜப்பானும் வென்றது.

பெண்களுக்கான 4மு400 ஓட்டப் போட்டியில் இந்திய அணி தங்கப்பதக்கத்தை வென்றது. பந்தயத் தூரத்தை 3.28.72 செக்கன்களில் நிறைவுசெய்தே இந்தியா தங்கத்தை வென்றது. இதில் வெள்ளிப் பதக்கத்தை பஹ்ரைனும் வெண்கலப்பதக்கத்தை வியட்நாமும் வென்றது, பெண்களுக்கான 4மு400 மீற்றர் ஓட்டத்திற்கான இறுதிப்போட்டிக்கு இலங்கை அணி தகுதிபெறவில்லை.

**இஸாரா மதுரங்கி தகுதி**

மேசைப்பந்து போட்டியில் பெண்கள் பிரிவில் கலந்துகொண்ட இலங்கை வீராங்கனை இஸாரா மதுரங்கி பாகிஸ்தான் வீராங்கனையை 4:0 என்ற செட் கணக்கில் வீழ்த்தி 32 வீராங்கனைகளுக்கான தகுதிநிலை சுற்றுக்கு முன்னேறினார். தனது இரண்டாவது போட்டியில் 5 ஆவது இடத்திற்கான போட்டியில் சீன வீராங்கனையுடன் போட்டியிடவுள்ளார்.

**ஜூடோ**

இதேவேளை ஆண்களுக்கான ஜூடோ போட்டியில் இலங்கை வீரர்கள் இருவர் போட்டியிட்டிருந்தாலும் அவர்களால் வெற்றிபெறமுடியவில்லை. 81 கிலோ கிராம் எடைப் பிரிவில் போட்டியிட்ட சாமர நுவன், கிர்கிஸ்தான் வீரரிடம் வீழ்ந்தார்.

# எஸ்.எல்.சி. 20/20 தொடர்; இறுதிக்குள் தம்புள்ளை




எஸ்.எல்.சி. 20/20 தொடரின், 12ஆவது லீக் போட்டியில், தம்புள்ளை அணி ஐந்து ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் தம்புள்ளை அணி, இந்த தொடரின் இறுதிப் போட்டிக்குள் அடியெடுத்து வைத்துள்ளது.

பல்லேகலமைதானத்தில் நடைபெற்ற போட்டியில், கொழும்பு அணியும், தம் புள்ளை அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தம்புள்ளை அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய தம்புள்ளை அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 140 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டமாக இசுரு உதான ஆட்டமிழக்காது 41 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் ஜீவன் மெண்டிஸ் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதனைதொடர்ந்து, 141என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய கொழும்பு அணியால், 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 135 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் அந்த அணி ஐந்து விக்கெட்டுகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டமாக பிரியமல் பெரேரா 46 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் அமில அபோன்சா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக இப்போட்டியின் வெற்றிக்கு துணை நின்ற இசுரு உதான தெரிவுசெய்யப்பட்டார். கொழும்பு அணி இந்தப் போட்டியில் தோல்வியடைந்திருந்தாலும், தொடரின் இறுதிப்போட்டிக்கான வாய்ப்பை ஏற்க னவே தக்கவைத்திருந்தது.

இதனடிப்படையில் குறித்த இரண்டு அணிகளும் எதிர்வரும் 2ஆம் திகதி கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் மோதவுள்ளன.

# ஜேர்மனி அணியில் லெரோய்

பிரான்ஸ், பெரு அணிகளுக்கெதிராக அடுத்த மாதம் விளையாடவுள்ள ஜேர்மனியக் குழாமில் முன்கள வீரரான லெரோய் சனே இடம்பெற்றுள்ளார்.

உலகக் கிண்ணக் குழாமில் அதிர்ச்சிகரமானதாக லெரோய் சனே சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்காத நிலையில், குழு நிலைப் போட்டிகளுடன் உலகக் கிண்ணத்திலிருந்து ஜேர்மனி வெளியேறியிருந்தது.

இதேவேளை, அறிவிக்கப்பட்டுள்ள இந்தக் குழாமில் மத்தியகள வீரரான சமி கெதீரா இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




# பெக்காமுக்கு உயர் விருது



2018ஆம் ஆண்டுக்கான ஐரோப்பிய உதைபந்தாட்டச் சங்கக் கூட்டமைப்பின் தலைவருக்கான விருது இங்கிலாந்து உதைபந்து அணியின் முன்னாள் நட்சத்திர வீரரான டேவிட் பெக்காமுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய உதைபந்தாட்டச் சங்கக் கூட்டமைப்பின் தலைவருக்கான விருது, சிறந்த சாதனைகள், தொழில்முறை சிறப்பம்சம் மற்றும் முன்மாதிரியான தனிப்பட்ட குணங்களை அங்கீகரித்து வழங்கப்படும் உயரிய விருதாகும்.

இதற்கமைய, மகத்தான வாழ்க்கை மற்றும் மனிதாபிமான முயற்சிகளை சிறப்பாக மேற்கொண்டதன் அடிப்படையில் இந்த விருது இங்கிலாந்து உதைபந்து அணியின் முன்னாள் தலைவரும் மத்தியக் கள வீரருமான டேவிட் பெக்காமுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த விருது கிடைக்கப் பெறுவது குறித்து மகிழ்ச்சியின் உச்சத்தில் உள்ள டேவிட் பெக்காம் கூறிய கருத்துக்கள் இவை,

என் வாழ்க்கையில் சில நேரங்களில் சிறந்த வீரர்கள், மிக பெரிய மேலாளர்களுக்கு கீழ், மிக பெரிய கழகங்களுக்காக விளையாடும் அதிர்ஷ்டம் கிடைத்தது. நான் மூன்றையும் வென்றெடுத்தேன் என நினைக்கிறேன், மென்செஸ்டர் யுனைட்டட் அணிக்காக விளையாடியது அற்புதமான தருணம்.

இது வரலாற்றை உருவாக்கிய ஒரு நேரம். கழக அணிக்காக நாம் எதாவது ஒன்றை உருவாக்கியுள்ளோம். மற்றும் சம்பியன்ஸ் லீக் வென்றது நம்பமுடியாத வெற்றி ஆகும். எனவே, அது ஒரு அற்புதமான தருணம் என்றார்.

டேவிட் பெக்காம், தலைமுறைக்கான சிறந்த உதைபந்து அடையாளம் என ஐரோப்பிய உதைபந்தாட்டச் சங்கக் கூட்டமைப்பின் தலைவர் அலெக்ஸாண்டர் செபெரின் புகழாரம் சூட்டியுள்ளார்.

மன்செஸ்டர் யுனைடெட் மற்றும் ரியல் மட்ரிட் கழக அணிகளின் சிறந்த மத்திய கள வீரர் என்ற விருது, சிறந்த உதைபந்து வீரர் விருது என பல விருதுகளைப் பெற்றுக் கொண்ட பிறகு, இந்த விருதைப் பெக்காம் பெற்றுள்ளார்.

டேவிட் பெக்காம், யுனிசெப் மற்றும் மலேரியா நோய் தொற்று தடுப்பு அமைப்புகளில் முக்கிய உறுப்பினராகவும் இவர் திகழ்கிறார்.

அத்தோடு, ஆபிரிக்காவில் வறுமையால் வாடும் குழந்தைகளுக்காக நிதியுதவி வழங்கியுள்ளதோடு, அங்கு அறக்கட்டளையும் நிறுவி உதவிகளை புரிந்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

உதைபந்து விளையாட்டில் 20 ஆண்டுக்காலங்கள் ஆதிக்கம் செலுத்தி வந்த டேவிட் பெக்காம், கழக மற்றும் தேசிய அணிகள் என மொத்தம் 762 போட்டிகளில் விளையாடி 130 கோல்களை அடித்துள்ளார்.

இங்கிலாந்து தேசிய அணிக்காக மட்டும், 115 போட்டிகளில் விளையாடி 17 கோல்களை அடித்துள்ளார். அத்தோடு மூன்று உலகக்கிண்ணத் தொடர்களிலும் விளையாடியுள்ளார்.

43 வயதான டேவிட் பெக்காம், 19 கழகக் கிண்ணங்களையும், 10 லீக் சம்பியன் பட்டங்களையும் வென்று கொடுத்துள்ளார்.

ஆறு பீரிமியர் லீக் சம்பியன் லீக் பட்டங்கள், இரண்டு எஃப்.ஏ கிண்ணங்கள் மற்றும் சம்பியன்ஸ் லீக் கிண்ணங்களையும், ஒரு லா லிகா கிண்ணம் என ஏராளமான சம்பியன் பட்டங்களை பெக்காம் வென்றுக் கொடுத்துள்ளார்.

இவர் முன்னணி கழக அணிகளான மன்செஸ்டர் யுனைடெட், ரியல் மட்ரிட், ஏ.சி. மிலான், பரிஸ் செயிண்ட் ஜெர்மைன் ஆகிய கழக அணிகளுக்காகவும் விளையாடியுள்ளார்.

இந்த விருதை பெறும் மூன்றாவது இங்கிலாந்து வீரர் இவராவார். இதற்கு முன்னதாக கடந்த 2002ஆம் ஆண்டு பொபி ராப்சனும், 2008ஆம் ஆண்டு பொபி சார்ல்டனும் இந்த விருதைப் பெற்றுள்ளனர்.

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை காணாமற்போனோர் எனக் கூறமுடியாது

## மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் சீற்றம்

கொழும்பு,செப்.01

நாட்டில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் குறிப்பிடுகையில் அநேகமானோர் காணாமல்போனோர் எனக் குறிப்பிடுகின்றனர். அவ்வாறு கூறுவது பொருத்தமற்றது. தனிப்பட்ட காரணங்களுக்காக சிலர் வேறெங்கேனும் செல்வதுண்டு. ஆனால் நாட்டில் திட்டமிட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் காணாமல்போனோர் எனக் குறிப்பிடுவது பொருத்தமற்றாகும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தலைவர் தீபிகா உடகம தெரிவித்தார்.



வலிந்து காணாமல் ஆக்கப்படு வதற்கு எதிரான சர்வதேச தினத்தை முன்னிட்டு காணாமற்போனோர் அலுவலகத்தால் ‘இனிமேலும் காணாமலாக்கப்படுவதைத் தடுப்போம்’ எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வு நேற்று முன்தினம் ஜே.ஆர்.ஜெயவர்தன நிலையத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு விசேட உரையாற்றியபோதே மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மனித உரிமைகள் விடயத்தில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு சர்வதேச ரீதியில் முன்னிலை பெற்றுள்ளது. மனித உரிமை தொடர்பில் ஏனைய நாடுகளுக்கு முன்னுதாரணமான நாடாகவே இலங்கை பார்க்கப்படுகின்றது. இலவசக் கல்வி, இலவச மருத்துவம் மற்றும் தனிமனித அபிவிருத்தி என்பவற்றில் முன்னிலையில் உள்ளது. எனினும் இங்கு வலிந்து காணாமலாக்கப்படுதல் எனும் பாரிய மனித உரிமை மீறல் இடம்பெற்றுள்ளமை வருந்தத்தக்க விடயமாகும்.

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் நீதித்துறை சார்ந்த பிரச்சினையாக மாத்திரமே பார்க்கப்படுகின்றது. எனினும் அது நீதித்துறைசார் பிரச்சினை என்பதுடன் பாரியதொரு சமூகப் பிரச்சினையும் ஆகும். ஆனால் எமது சமூகத்திலே இவ்விடயம் தொடர்பில் தெளிவற்ற நிலையே உள்ளது. காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் பேசும் போது அநேகம்பேர் யுத் தத்தை வென்ற வீரர்களுக்கு எதிராகப் பேசுவதாகவும், அவர்களைத் துரோகிகளாகவும் பார்க்கும் நிலையும் உள்ளது.

அது முற்றிலும் தவறாகும். இவ்விடயத்தை இன, மத ரீதியாகப் பார்ப்பது நாட்டுக்குச் செய்யும் துரோகமாகும். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் வேதனையை அவர்களின் நிலையிலிருந்து நோக்கினால் மாத்திரமே புரிந்து கொள்ள முடியும்.

காணாமல்போனோர் விவகாரம் தொடர்பில் காணாமல்போனோர் அலுவலகம் செயற்றிறன் மிக்க வகையில் செயற்பட்டு வருகின்றது. பொதுவாக எத்தனை பேர் காணாமற்போனார்கள் போன்ற எண்ணிக்கைக்கு முக்கியத்துவம் அளிக்கின் றோம். எனினும் ஒருவருக்கு அநீதி இழைக்கப்பட்டாலும் அது மனித உரிமைக்கான சவாலாளதுதான். இவ்விடயத்தில் காணாமல்போனோர் அலுவலகம் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது.

அந்தவகையில் அலுவலகத்தை மேலும் பலப்படுத்துவதுடன், இவ்விடயம் சார்ந்த ஏனைய பங்காளர்களையும் பலப்படுத்துவது அவசியமாகும். காணாமற்போனோர் அலுவலகத்திற்கு இதுவரை எவ்விதமான அரசியல் நெருக்கடிகளும் காணப்படவில்லை என்பதுடன், அதன் செயற்பாடுகளில் அரசியல் தலையீடுகள் இருக்கவில்லை. காணாமற்போனோர் அலுவலகம் மக்களுக்கானது. எனவே அதன் சுயாதீனச் செயற்பாடுகளுக்கு மக்கள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் – என்றார். (ஐ)

# காணாமற்போனோரின் குடும்பங்களுக்கு வாழ்வாதாரக் கோடுப்பனவுகள் அவசியம்

## காணாமற்போனோர் செயலகம் பரிந்துரை

கொழும்பு,செப்.01

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு வாழ்வாதாரக் கொடுப்பனவுகளை அரசு வழங்க வேண்டுமெனக் காணாமற்போனோர் செயலகம் பரிந்துரைத்துள்ளது என அதன் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்தார்.

’பலவந்தமாகக் காணாமல் போனோர் தொடர்பான சர்வதேச தினத்தை முன்னிட்டு கொழும்பு ஜே.ஆர்.ஜெயவர்த்தன நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:–

யுத்த காலத்தில் இடம்பெற்ற காணாமல்போதல்கள் தொடர்பில் தகவல்களைத் திரட்டுவதற்கும் விசாரணைகளை நடத்துவதற்கும் காணாமற்போனோர் அலுவலகம் அமைக்கப்பட்டது. பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நட்டஈடுகளை வழங்குவது, மீள நிகழாமை, காணாமற்போனவர்களின் குடும்பங்களுக்கு உளரீதியான உதவிகளை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்களைக் காணாமற்போனோர் அலுவலகம் தனது இடைக்கால அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இடைக்கால அறிக்கை எதிர்வரும் ஐந்தாம் திகதி ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது. காணாமற்போனவர்களின் குடும்பங்களுக்கு அலுவலகம் பரிந்துரைத்திருக்கும் பொருளாதார ரீதியிலான நிவாரண நடவடிக்கைகள், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு உண்மையை அறிந்து கொள்ளும் உரிமையைச் சமரசம் செய்வதாக இருக்காது.

விசாரணைகள் பூர்த்தியாகும் வரை காணாமல்போனவர்களின் குடும்பங்களுக்கு இடைக்காலக் கொடுப்பனவொன்று வழங்கப்பட வேண்டும் என்றும் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. காணாமற்போனவர்களின் குடும்பங்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளுக்குப் பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்புத் தரப்பினர் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் ஆணைக்குழுவின் பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பலவந்தமாகக் காணாமற்போதல்களின் சாட்சிகளாக இருப்பவர்களுக்குப் பல்வேறு அச்சுறுத்தல்கள் மற்றும் அழுத்தங்கள் இருப்பதை நாம் அறிவோம். இவ்வாறான அச்சுறுத்தல்கள் நிறுத்தப்படவேண்டும்.

இந்த வருட ஆரம்பத்தில் நிறைவேற்றப்பட்ட பலவந்தமான காணாமற்போதல்களைத் தடுப்பது தொடர்பான சட்டமூலத்தில் திருத்தங்களைக் காணாமற்போனோர் அலுவலகம் முன்வைத்திருந்தது. பாரிய மனிதப் புதைகுழிகள் தொடர்பான அகழ்வுப் பணிகளில் போதிய தொழில்நுட்ப வசதிகள் மற்றும் விசாரணை செய்வதில் போதிய வசதிகள் இல்லாத நிலைமை காணப்படுகிறது. இதனை நிவர்த்தி செய்யும் வகையில் தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

காணாமற்போனவர்களின் நினைவாக அஞ்சலிக் கூட்டங்கள் நடத்துவதற்கும், அவர்களின் நினைவாகத் தூபிகள் அமைப்பதற்கும் அரசு இடமளிக்க வேண்டும் என ஆணைக்குழு அரசுக்குப் பரிந்துரைத்துள்ளது. தேசிய மட்டத்தில் நினைவு நிகழ்வுகள் நடத்தப்படவேண்டும் என்றும் சுட்டிக் காட்டியுள்ளது.

உண்மையான நல்லிணக்கத்தை நாட்டில் ஏற்படுத்தவேண்டுமாயின் கடந்த காலங்களில் பலர் காணாமற்போயுள்ளனர் என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டும். இலங்கையில் காணாமற்போனவர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் அதிகமாக உள்ளது. இது நீண்ட காலம் தீர்க்கப்படாத பிரச்சினையாகவும் உள்ளது. பலவந்த காணாமற்போதல்களில் ஈடுபட்டவர்கள் யுத்த வீரர்களாக கொண்டாடப்பட்ட, பாதிக்கப்பட்டவர்கள் துரோகிகளாக பார்க்கப்பட்ட காலமொன்று இருந்தது – என்றார். (ஐ)



# கர்ப்பிணிப் பெண் படுகொலை; கிளிநொச்சியிலும் ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி, செப்.01

படுகொலை செய்யப்பட்ட நித்தியாவிற்கு நீதி கோரி கிளிநொச்சியிலும் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சிச் சந்தை முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் முற்பகல் 10.30 மணியளவில் ஆரம்பமானது.

சமத்துவம், சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், கிராம மட்ட அமைப்புக்களும் கலந்து கொண்டன.

கிளிநொச்சிச் சந்தைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்த ஆர்ப்பாட்டக்காரர்கள், ஏ–9 வீதி ஊடாகக் கிளிநொச்சி பொலிஸ் நிலையம் வரை பேரணியாகச் சென்றனர்.

அங்கு பொலிஸ்மா அதிபருக்கான மகஜர் ஒன்றை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் ஆர்ப்பாட்டக்காரர்கள் கையளித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் குறிப்பிடுகையில்,

கொடூரமாக படுகொலை செய்யப்பட்ட நித்தியாவிற்கு நீதி கிடைக்கவேண்டும். இந்தச் செயலைச் செய்த குற்றவாளிகளைப் பொலிஸார் விரைந்து கைது செய்ய வேண்டும். அத்துடன் மாவட்டத்தில் காணப்படும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தவேண்டும் – என்றார். (ஐ)

# சொந்த மாவட்டத்துக்கு இடமாற்றம் கோரும் அபிவிருத்தி அலுவலர்கள்

யாழ்ப்பாணம்,செப்.01

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், தமக்குச் சொந்த மாவட்டத்துக்கு இடமாற்றம் வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமனம் பெற்ற நாளிலிருந்து 5 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலேயே அவர்கள் இந்தக் கோரிக்கையை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிடம் முன்வைத்துள்ளனர்.

இது தொடர்பில் உள்நாட்டு அமைச்சின் செயலாளருக்கு அவர்கள் அனுப்பி வைத்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2012ஆம் ஆண்டு ஆட்சியிலிருந்த அரசின் பட்டதாரிகளுக்கான பணி நியமனத்தின்போது, யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பட்டதாரிகளில் ஒரு பகுதியினர், கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு உட்பட்ட பிரதேச செயலகங்களில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டோம்.

2012ஆம் ஆண்டு ஜூலை 2ஆம் திகதி பட்டதாரிப் பயிலுநர்களாக இணைக்கப்பட்ட எமக்கு, 2013ஆம் ஆண்டு ஜூலை மாதம் 2ஆம் திகதி அபிவிருத்தி உத்தியோகத்தர் பணி நியமனம் வழங்கப்பட்டது.

அன்றிலிருந்து தொடர்ச்சியாக 5 ஆண்டுகளாகக் கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்றி வருகின்றோம்.

தினமும் சுமார் 120 கிலோ மீற்றர் தூரம் பயணிப்பதால், உடல், உள ரீதியாகப் பாதிக்கப்படுகின்றோம்.

பெண் உத்தியோகத்தர்கள், தமது குழந்தைகள் மற்றும் வயோதிபப் பெற்றோரைப் பராமரிப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர் கொள்கின்றனர். எமது பிள்ளைகளுக்குப் பெற்றோரின் கவனிப்பு இல்லாமல் போகிறது. கர்ப்பவதி உத்தியோகத்தர்கள் உடல் ரீதியான சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எங்களுடன் நியமிக்கப்பட்ட பலர், அரசியல் உட்பட்ட செல்வாக்குகளாலும் காரணிகளாலும் தமது சொந்த இடங்களிலேயே பணியாற்றி வருகின்றனர்.

நீண்டதூரப் பயணம் மற்றும் உணவுக்கான செலவீனங்களால் நிதி நிலை ரீதியாகப் பாதிக்கப்படுகின்றோம். ஆகிய காரணங்களைக் கருத்தில் எடுத்து எம்மை சொந்த மாவட்டத்துக்கு இடமாற்றம் வழங்குமாறுகேட்டுக்கொள்கின்றோம்–என்றுள்ளது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.09.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.